விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 05 செவ்வாய்க்கிழமை (21.10.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 307

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL


CALL :- 222 5908/222 8812

# 6 முனைகளில் படையினர் முன்னகர்வு முறியடிப்பெனப் புலிகள் அறிவிப்பு

## வன்னேரிக்குளம் கட்டுப்பாட்டில் என்கின்றனர் படையினர்

(கொழும்பு)

நாச்சிக்குடா தொடக்கம் அக்கராயன் வரையான பகுதிகளில் படையினர் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்ட 6 முனைகளிலான முன்னகர்வுக்கு எதிராக உக்கிர எதிர்த் தாக்குதலை நேற்றுக் காலை வரை மேற்கொண்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். இதேவேளை வன்னேரிக்குளம் பிரதேசத்தைப் படையினர் நேற்று முன்தினம் மாலை தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளதாகத் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)



வன்னேரிக்குளத்தில் படையினரின் உழவு இயந்திரம் ஒன்று புதையுண்ட நிலையில் காணப்படுவதைப் படத்தில் காணலாம். *படம்:- தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம்*

## ஜீ.எஸ்.பி. வரிச் சலுகைக்காக மண்டியிடப் போவது இல்லை

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை சர்வதேச நியமங்களுக்கு அமைய இருக்கின்றன என்பதை விசாரித்து உறுதி செய்த பின்னரே இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் ஏற்றுமதித் தீர்வை முன்னுரிமை சலுகைகளை நீடித்துத் தர முடியும் என்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிபை இலங்கை அரசாங்கத்தால் ஏற்க முடியாது என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்படும் வரிச் சலுகையான 150 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெறுவதற்காக இலங்கையின் இறைமையையும் மதிப்பினையும் தன்மானத்தையும் தாரைவார்த்துக் கொடுக்க அரசு தயாராக இல்லை என்று சர்வதேச வர்த்தக ஊக்குவிப்புத்துறை அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பேச்சுவார்த்தைகளை நடத்த முடியும் எனவும் எனினும் விசாரணைகளை மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட மாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வரிச் சலுகை (12 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற அமர்வுகளை மட்டுப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்ற அமர்வுகளை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர்கள் மற்றும் எம்.பிகளுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களைத் தடுக்க இம் முடிபு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் விடுதலைப்புலிகளின் தற்கொலைதாரிகள் ஊடுருவியுள்ளதாகவும் இதனையடுத்து அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்களின் பயணங்களைக் குறைப்பதற்காக இந் நடவடிக்கை (12 ஆம் பக்கம் பார்க்க)

## புறக்கோட்டையில் குண்டுவெடிப்பு

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டை மத்திய பேருந்து நிலையத்துக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் குண்டு வெடிப்பு சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

பேருந்து நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்து ஒன்றில் இருந்தே இந்த குண்டு வெடித்துள்ளதாகப் புறக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் 3 பேருந்துகள் சேதமடைந்துள்ளது. எனினும் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்பட (12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க ரஷ்யா ஆதரவு

### பாதுகாப்புச் செயலரிடம் உறுதியளிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்துக்கு எதிராக இலங்கை முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாக ரஷ்ய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருக்கும் இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ, ரஷ்ய அரசாங்கத் தரப்பினரைச் சந்தித்த போது இவ்வாறு உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

உயர்மட்டக் குழுவொன்றுடன் ரஷ்யாவுக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு, ரஷ்ய பாதுகாப்பு (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் பிரதான வீதிகள் 30 நிமிடத்துக்கு மூடப்படும்

(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டிச் சந்தியிலிருந்து நாடாளுமன்றம் வரையிலான பிரதான வீதிகள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை நாளாந்தம் காலையும் மாலையும் 30 நிமிட நேரத்திற்கு மூடப்படவுள்ளதாகப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

முற்பகல் 9 மணி தொடக்கம் 9.30 மணி வரையும் பின்னர் மாலை 5 மணி தொடக்கம் 5.30மணி வரையும் குறித்த பகுதிகளுக்கு இடைப்பட்ட வீதிகள் மூடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகக் கட்சிகள் எடுத்த முயற்சி வீண்போகவில்லை

### முதல்வர் கருணாநிதி ஆறுதல்

(சென்னை)


இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசை வலியுறுத்தி தமிழகத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் எடுத்த முயற்சிகள் வீண் போகவில்லை என்று முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை ஜனாதிபதியுடன் பேசியதைத் தொடர்ந்து ஐ.நா. அனுப்பி வைத்த உணவுப் பொருள்கள் வன்னியில் 2 இலட்சத்து 30 ஆயிரம் தமிழர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டிய முதல்வர் இவ்வாறு கூறியுள்ளார்.

முதலமைச்சர் கருணாநிதி நேற்று கட்சித் தொண்டர்களுக்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் இலங்கைத் தமிழர்களைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் பிரச்சினைகளை அரசு யுத்தத்தால் மூடி மறைக்கின்றது

### ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

அரசாங்கம் மக்கள் பிரச்சினைகளை யுத்தத்தின் மூலம் மூடி மறைப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யுத்த நடவடிக்கைகளைப் படையினரிடம் ஒப்படைத்து விட்டு நாட்டு மக்களின் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வினைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக கிளர்ந்தெழும் தமிழக உறவுகள்

## நன்றி தெரிவித்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

ஈழத்தமிழ் மக்கள் மீதான கண்மூடித்தனமான போரை திணித்திருக்கும் இலங்கை அரசுக்கு எதிராக கிளர்ந்தெழுகின்ற தமிழக உறவுகளுக்கு பல்கலைகழக சமூகமாகிய நாங்கள் நன்றிகளை தெரிவிக்கின்றோம் என யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஈழத்தில் இலங்கை அரசு தமிழ்மக்களுக்கு எதிரான போரை பெருமளவில் முன்னெடுத்து வருகின்றது.

இதனால் எமது மக்கள் உணவு, இருப்பிடமின்றி அகதிகளாக மீண்டும் மீண்டும் இடம் பெயரும் அவல நிலையும், பருவமழை வெள்ளத்தில் அல்லலுறுகின்ற கொடூரமும் தொடர்ந்து செல்கின்றது.

மக்கள் குடியிருப்புக்களை யுத்த முனைகளாகத் திறந்து கண்மூடித்தனமான போரை இலங்கை அரசு திட்டமிட்டு நடத்திவருகின்றது.

இந்நிலையில் ஈழத்தில் அல்லலுறும் மக்கள்மீது மிகுந்த அக்கறைகாட்டி குரலிடுகின்ற தார்மீகப் பொறுப்பில் தமிழக மக்கள் பங்கெடுத்து வருவது மகிழ்ச்சி தருகின்ற விடயமாகும்.

எமது தொப்புள் கொடி உறவுகளான தமிழக உறவுகள் எமக்காக பல்வேறு வழிகளில் போராட்டங்களை நடத்துவது எமக்கு பெரிய ஆறுதலையும், நம்பிக்கையும் தருகின்றது.

இதன்மூலம் இந்திய மத்திய அரசினுடைய நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படும் என நம்புகின்றோம்.

நமக்கு எதிராக இந்தியாவை கையாளுகின்ற இலங்கை அரசினுடைய தந்திரோபாயத்தினை இந்தியா புரிந்து கொள்ள இந்த உணர்வெழுச்சி உதவும் என நம்புகின்றோம்.

இராணுவத் தீர்வில் பெரும் முனைப்புடன் ஈடுபடுகின்ற இலங்கை அரசினுடைய கடும் போக்கினை இந்தியா உடனடியாக தலையிட்டு நிறுத்த வேண்டும்.

அப்பாவித் தமிழ்மக்களுக்கு எதிராக நடக்கும் போரை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும்.

எமது மக்களின் நிம்மதியான வாழ்வையும், உரிமைகளையும் பெறுவதற்கு தமிழக மக்களின் உணர்வெழுச்சி உதவும் என்பதில் பெரும் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம்.

ஈழத்தில் அமைதி ஏற்படுவதற்கு எமது உறவுகள் உணர்வெழுச்சிப் போராட்டங்களை மென்மேலும் முன்னெடுப்பார்கள் என்ற திடகாத்திரமான நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம்.

ஈழத்தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கின்ற அரசியல் தலைவர்கள், ஊடகத்துறையினர், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், திரையுலகத்தினர், நீதிதுறையினர், வணிக துறையினர் என்று ஒட்டுமொத்த தமிழக மக்களுக்கும் பல்கலைக்கழக சமூகத்தினராகிய நாங்கள் மீண்டும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம் என்றுள்ளது. (ஏ)

# மொழியியல் ஆங்கிலக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் மொழியியல் ஆங்கிலத் துறையினரால் மொழியியல் ஆங்கிலக் கண்காட்சி 'Lingua-2008' இன்றும் நாளையும் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தில் நடைபெறுகின்றது.

இதில் மொழியியல் சம்பந்தமான காட்சிப் பொருள்களும், ஆங்கில மொழி இலக்கியத்தைப் பற்றிய காட்சிப் பொருட்களும் பார்வைக்கு வைக்கப்படும் பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் மொழியியல், ஆங்கிலம் கற்பவர்களும் மொழியியல், ஆங்கிலமொழி இலக்கியம் என்பவற்றில் ஆர்வமுள்ளவர்களும் இதைப் பார்த்து பயன்பெறலாம் என யாழ்.பல்கலைக்கழக மொழியியல் ஆங்கிலத்துறையினர் தெரிவிக்கின்றனர். (ச)

# தனியார் வாகனங்களை நம்பியிருக்கும் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு போதிய வாகன வசதி இல்லாமையால் அன்றாட பணிகளை சிறந்த முறையில் செய்ய முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் சரணடைபவர்களை அன்றைய தினம் பொலிஸாரிடம் ஒப்படைக்க வேண்டும்.

பொலிஸாரிடம் இவர்களைக் கொண்டு செல்வதற்கு அலுவலகப் பகுதியிலுள்ள முச்சக்கர வண்டி, கார்கள் மற்றும் அங்கு பணிபுரிபவர்களின் மோட்டார் சைக்கிள்களே பயன்படுத்தப்படுகின்றன.

அவ்வாறு கொண்டு செல்லப்படும் போது மனித உரிமைகள் ஆணைக்குழு வாகனம் என்பதை அடையாளப்படுத்தும் ஆவணங்கள் கொண்டு செல்லப்படுவதில்லை.

இதனால் உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரணடைபவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகப் பாவனைக்காக பயன்படுத்தப்பட்ட வாகனத்தில், 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் ஆயுதங்கள் மானிப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டு, வாகனத்தின் சாரதி உட்பட நான்குபேர் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் நடைபெற்று நான்கு மாதங்கள் ஆன நிலையிலும் இதுவரை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் பாவனைக்கு வாகனம் வழங்கப்படவில்லை என்றும் இதனால் தனியார் வாகனங்களை பயன்படுத்தும் நிலையிலேயே யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-5)

# கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

எக்ஸ்போ எயார் மற்றும் சண்முகம் சைவ உணவகம் ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடாத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை 91:20 என்ற அடிப்படையில் வெற்றி கொண்டது.

மறுநாள் 15 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி அணியும் யாழ்.புனித பரியோவான் கல்லூரி அணியும் மோதிக்கொண்டு தலா 42 புள்ளிகளைப் பெற்று சமநிலையடைந்தன.

16ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணியை 57:46 என்ற நிலையில் வெற்றி கொண்டது.

17ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் புனித பரியோவான் கல்லூரி அணி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை 70:44 என்றவாறு வெற்றி கொண்டது.

பெண்கள் அணிக்கான போட்டியில் திருக்குடும்ப கன்னியர் மடம் பங்குபற்றத் தவறியமையால் உடுவில் மகளிர் கல்லூரி அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (ச)

# தற்கொலை குண்டுதாரி இறுதியாகப் பேசிய சிம் அட்டையின் உரிமையாளர் புங்குடுதீவில் வைத்து கைது

(யாழ்ப்பாணம்)

அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவை இலக்கு வைத்து தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டவர் இறுதியாக பேசிய கைத்தொலைபேசி சிம் அட்டையின் உரிமையாளர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் புங்குடுதீவில் வைத்து கடந்த 17 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த தியாகராஜா சுதாகரன் என்பவரே கைது செய்யப்பட்டவர் ஆவார். இவர் யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் இ.வசந்தசேனன் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டபோது எதிர்வரும் 3ஆம் திகதிவரை பொலிஸாரின் கட்டுப்பாட்டில் வைத்து விசாரிப்பதற்கு நீதிவான் அனுமதி வழங்கினார்.

இதேவேளை அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவை இலக்குவைத்து தாக்குதல் நடத்திய தற்கொலை குண்டுதாரியின் தாயார் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தற்கொலைக் குண்டுதாரி தங்கியிருந்த வீட்டு உரிமையாளர் வெள்ளவத்தையில் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# மின்வெட்டு நேரமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிற்கான மின் வெட்டு நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனடிப்படையில் யாழ்.நகரையும் அதனையண்டிய பகுதிகளிலும் அரைமணி நேர மின்வெட்டு அமுலில் இருக்கும்.வட மராட்சிப் பிரதேசத்தில் ஒரு மணிநேரமும், ஏனைய பகுதிகளில் ஒன்றரை மணிநேரமும் மின்வெட்டு அமுலில் இருக்கும் என மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

# நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவின் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதியில் இருந்து திருநெல்வேலி பாரதிபுலம் பாரதி சனசமூக நிலையத்திற்கு புத்தகக் கொள்வனவுக்கென ரூபாய் 75 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஓ)



தேசியமட்டத்தில் நடைபெற்ற பாடசாலை மட்ட மெய்வல்லுநர் போட்டியில் 21 வயது உயரம் பாய்தலில் பதக்கம் பெற்ற வீராங்கனைக்கு வலிகாமம் கல்விவலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.நடராஜா பதக்கம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தினால் நவம்பர் முதலாம், இரண்டாம் திகதி யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடாத்தப்பட இருக்கும் தடகள போட்டிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 28.10.2008 அன்றுவரை நீடிக்கப்பட்டுள்ளது என யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் அறிவித்துள்ளது.

மேற்படி போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை என்.சிறிகாந்தா-வீரசிங்கம் மகா வித்தியாலயம் மீசாலை, ஏ.வசந்தன்-பருத்தித்துறை பிரதேச செயலகம், ரில்கோ கொலிடேஸ் பிரைவற் லிமிட்டெட் ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# புகுமுக மாணவர்களை உள்வாங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கு புகுமுக மாணவர்களை உள்வாங்கும் நிகழ்வு நாளைக்காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

கற்றல் செயற்பாட்டை மேற்கொள்ள பதிவு செய்த மாணவர்களை அன்றைய தினம் சமுகமளிக்குமாறு விவசாயபீட மாணவர் ஒன்றியம் கேட்டுக்கொள்கின்றது. (ச)

எமது புதிய வெளியீடு

புதிய DVD { தமிழ் / ஆங்கிலம் / தமிழாக்கம் / ஹிந்தி

இராமாயணம் / மஹாபாரதம் } DVD

(1859)

FLASH CD HOUSE

No:1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தவறிவிட்டது

சங்கரத்தை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சந்திரசோதி சுகிர்தன் (891472374V) ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் சிறு தொகைப் பணமும் வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் நவாலி வீதிக்கும் இடையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

புத்தகக் களஞ்சியம்
இந்து வாலிபர் சங்கம்
வட்டுக்கோட்டை.

(C-1703)

## இன்று ஒரு தகவல்

### பாட்டும் பரிசும்

"அந்தக் காலத்து மன்னர்கள் எல்லாம் சும்மா ஒரு பாட்டு எழுதிக் கொண்டு போய் படித்துக் காட்டினாலே பொன்னும் பொருளும் வாரி வழங்குவார்கள்.

ஆனால் இந்தக் காலத்தில் அப்படியில்லை" என்று ஆதங்கப்பட்டார் ஒருவர்.

"இப்பொழுதும் கவிதை எழுதுபவர்களுக்கு பொற் கிழி வழங்கி பட்டமும்கொடுக்கிறார்களே!" என்றேன்.

"எல்லாம் செய்கிறார்கள் சரி!ஆனால் எனக்கு யாரும் செய்கிறார்களில்லையே!" என்றார் அவர்.

"கவலைப்படாதீர்கள்! உங்களுக்கு ஒரு காலம் வரும்!" என்று அவருக்கு ஆறுதல் கூறினேன்.

அவரை உட்கார வைத்து எனக்குத் தெரிந்த பழைய கதை ஒன்றையும் சொன்னேன்.

அந்தக் காலத்தில் ஒரு ராஜா இருந்தார். அவரைத் தேடி ஒரு கவிஞர் வந்தார். மன்னனை புகழ்ந்து பாட ஆரம்பித்தார்.

ஒரே ஒரு பாட்டுத் தான் பாடினார். அதைக் கேட்ட ராஜா உடனே எழுந்து தெற்கு முகமாக திரும்பி உட்கார்ந்து கொண்டார்.

அதைப் பார்த்த கவிஞருக்கு வருத்தமாகி விட்டது.

"என் இது ...நமது பாட்டைக் கேட்டவுடன் கிழக்கு முகமாக இருந்த ராஜா முகத்தைத் திருப்பிக் கொண்டு தெற்கு முகமாக உட்காந்து விட்டாரே!" என்று நினைத்தார். இருந்தாலும் அந்த கவிஞர் விடாமல் அவர் முன்னால் போய் நின்று இன்னொரு பாட்டு பாடினார் .ராஜா மறுபடியும் எழும்பி மேற்குப் புறமாக திரும்பி உட்கார்ந்து கொண்டார்.

இந்தப் புலவர் அப்பொழுதும் விடுவதாக இல்லை. மறுபடியும் அவர் முன்னாள் போய் இன்னொரு பாட்டை பாடினார்.

ராஜா உடனே எழுந்து உள்ளே போய் விட்டார். சபை கலைந்து விட்டது. எல்லோரும்போய் விட்டார்கள்.

புலவர் மட்டும் நின்று கொண்டிருந்தார். அவருக்கு மிகுந்த ஏமாற்றமாகப் போய் விட்டது. முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டே அரண்மனையை விட்டு வெளியேறினார்.

அந்த சமயத்தில் எங்கேயோ போயிருந்த அமைச்சர் உள்ளே வந்தார். வாசலில் புலவரைப் பார்த்து,

"என்ன கவிஞரே! வெளியில் கொஞ்ச வேலை இருந்ததால் இன்று அரச சபைக்கு வர முடியவில்லை!உங்கள் பாட்டையும் கேட்க முடியவில்லை! அது சரி... ராஜா என்ன பரிசு கொடுத்தார்?" என்று கேட்டார்.

அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறாய் ஏன் கேட்கிறீர்கள் என்று ஆரம்பித்து அரண்மனையில் நடந்ததை அப்படியே ஒப்புவித்தார் புலவர்.

அமைச்சர் அதனைக் கேட்டு விட்டு ,"சரி புலவரே! அரசர் உமக்கு கொடுத்ததை இப்பொழுது நான் விலை கொடுத்து வாங்குகிறேன். இந்தாருங்கள ஆயிரம் பொன்!" என்றார்.

புலவருக்கோ ஒன்றும் புரியவில்லை. அமைச்சருக்கு புத்தி சுவாதீனம் சரியாக இல்லை போல இருக்கு என்று முடிவு செய்து சரி...வருவதை எதற்கு விடுவான் என்று நினைத்து ஆயிரம் பொன்னையும் வாங்கிக் கொண்டு வேகமாக போய் விட்டார்.

அந்தப்புரத்தில் ராஜா கவலையுடன் இருந்தார். ராணி வந்து என்ன விஷயம் என்று விசாரித்தார். அதற்கு ராஜா,

இன்று அரசசபைக்கு ஒரு பெரிய கவிஞர் வந்தார். நான் கிழக்கு முகமாக உட்காந்திருந்தேன். என்னைப் பார்த்து ஒரு கவி பாடினார். மிகவும் உயர்ந்த கவிதையாக இருந்தது.

அதனால் கிழக்குத் திசையில் உள்ள நமது இராஜ்ஜியம் முழுவதும் அவருக்குப் பரிசாகக் கொடுத்து விட்டேன். அவருக்கென்று கொடுத்து விட்ட இராஜ்ஜியத்தை இனி மேல் நான் பார்க்கக் கூடாது என்று நினைத்து தெற்கு திரும்பி உட்காந் தேன். அங்கும் வந்து பாடினார் .அதையும் கொடுத்து விட் டேன். இப்படி எல்லா இராஜ்ஜியத்தையும் அவருக்குத் தானம் பண்ணி விட்டேன் . இனி மேல் நாம் இங்கே இருக்கிறது சரியில்லை! புறப்படு... தபோவனத்துக்குப் போய் விடுவோம்!" என்றார் ராஜா.

இருவரும் புறப்பட்டு ஆயத்தமாகினர். அந்தச் சமயத்தில் அமைச்சர் அங்கே வந்தார். "அரசே...இந்த சாம்ராஜ்ஜிய பொறுப்பு உங்களை விட்டுப் போய் விடவில்லை! நீங்கள் அந்தப்புலவருக்குக் கொடுத்ததை ஆயிரம் பொன் கொடுத்து நமக்கே திருப்பி வாங்கி விட்டேன்" என்று விவரத்தைச் சொன்னார். அதன் பின்னர் இந்த ராஜா மறுபடியும் சிறப்பாக ஆட்சி செய்தார்! என்று இந்தக் கதையை என் முன்னாலிருந்த இந்தக்கால கவிஞரிடம் சொன்னேன் .இதைக்கேட்டவுடன் அவர் துள்ளிக் குதித்தார்.

"என்னவிஷயம் ?" என்று விசாரித்தேன்.

அதற்கு அவர் "நான் நேற்று ஒரு சினிமா இசையமைப்பாளரிடம் போய் நான் எழுதிய பாட்டைப் படித்துக் காட்டினேன். முதலில் கிழக்குமுகமாகஉட்காந்து ஆர்மோனியம் வாசித்தவர் என் பாட்டைக் கேட்டதும் மேற்கு முகமாக திருப்பி உட்கார் ந்து விட்டார். இதற்கு என்ன அர்த்தமாக இருக்கும்? " என்றார்.

"நானே அவரிடம் கேட்டுச் சொல்கிறேன்." என்றேன்.

ஒரு நாள் அவரைப் பார்த்து, "சேர்...அந்த கவிஞன்வந்து தன்னுடையபாட்டைப் படித்து காட்டிய போது நீங்கள் பின்புற மாக முகத்தை திருப்பிக் கொண்டு உட்கார்ந்திருந்தீர்களாமே! அதற்கு என்னஅர்த்தம்?" என்றேன்.

அவர் கோபமாக என்னை முறைத்து விட்டு அந்த ஆள் முகத்தில் மறுபடியும் நான்முழிப்பதற்கு விரும்பவில்லை என்று அர்த்தம்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## புலிகள் என்ற பதத்தை நீக்குமாறு கருணா, பிள்ளையானுக்கு பணிப்பு



உறுப் பினர் விநாயக மூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்)

(கொழும்பு)

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்கட்சியை புதிய பெயரில் புதிவு செய்யுமாறு பாராளுமன்ற கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேச துரை சந்திரகாந்தனுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கட்சியின் பெயரில் புலிகள் என்ற பதம் நீக்கப்படவேண்டும் என கருணா அம்மான் பரிந்துரைத்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை பிள்ளையான் தரப்பினருக்கும் கருணா தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல்களைத் தொடர்ந்து கருணா இந்த உறுதியான முடிபை எடுத்திருப்பதாக தெரியவருகிறது.

கட்சியின் சின்னத்தில் இருக்கும் புலியும் நீக்கப்படவேண்டுமென முரளிதரன் கூறியுள்ளார். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கொள்கைத் திட்டங்களுக்கு அமையவே அந்தக் கட்சி செயற்படுவதாகத் சிங்கள மக்கள் மத்தியில் தொடர்ந்தும் சந்தேகம் நிலவுவதால் சிங்களவர்களின் நம்பிக்கையை வெல்வதற்கு இவ்வாறான நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் அனைவரினதும் ஆயுதங்கள் களையப்பட்டு அவர்கள் சிவில் பாதுகாப்புப் பிரிவில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களை சிவில் பாதுகாப்பு பிரிவில் இணைக்குமாறும் முரளிதரன் கிழக் கு மாகாண முதலமைச்சருக்கு அறிவித்தல் விடுத்துள்ளார்.

எனினும் இந்த விடயம் தொடர்பாக தீர்மா னம் எடுப்பதற்கு மூன்று நாட்கள் அவகாசம் தேவை என கிழக்கு மாகாண முதலமைச்சர் பதிலளித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-5)

## 9 ஆம் தரத்திற்கான பாட நூல்களை புதிய பாட விதானத்திற்கேற்ப ஆக்குதல்

### விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(திருகோணமலை)

பாடசாலைகளில் 9 ஆம் தரத்திற்கான பாடநூல்களை திருத்தியமைக்கப்பட்ட புதிய பாடவிதானத்திற்கேற்ப ஆக்குதலுக்கு கல்வி வெளியீட்டு திணைக்களத்தினால் விண்ணப் பங்கள் மீண்டும் கோரப்பட்டுள் ளது.

மேற்படி விண்ணப்பங் கோரல் பத்திரிகைகள் மூலம் பிரசுரிக்கப்பட்டு அதற்குரிய விண்ணப்ப முடிவுத் திகதி 15.0 9.2008 உடன் நிறைவடைந்தது.

எனினும் எவருடைய விண்ணப்பமும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு கிடைக்காமையால் மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்படுவதாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ஆர். மதிவாணன் மகாணக் கல்விப் பணிப்பாளர் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

எனவே திறமை வாய்ந்த ஆசிரியர்களை இனங்கண்டு அவர்கள் உடனடியாக விண்ணப்பிப்பதற்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர். வீ. இராசையா அறிவித்துள்ளார்.

விண்ணப்பங்களை அந்தந்த வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

மேற்படிவிண்ணப்பங்கள் கோரல் தொடர்பாக வட மாகாண கல்விப் பணிப்பாளரால் அனுப்பி வைக்கப் பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தை இன்று முதல் ***வலம்புரிக்*** காரியாலயத்தில் பார்வையிடலாம். (ஓ-5)

## இராசி பலன்

21.10.2008
(ஐப்பசி 5, செவ்வாய்க்கிழமை)
ஸப்தமி முற்பகல் 11.06 மணிவரை
புநர்பூசம் முன்னிரவு 8.20மணிவரை
இராகுகாலம் 3.02-4.32மணிவரை
சுபநேரம்10.32 -12.02மணிவரை

| | |
|---|---|
| மேடம் | ரோக நிலை, சுப செய்தி, முயற்சி தாமதம், மனப் பயம். |
| இடபம் | காரிய அனு கூலம், போசனசுகம், பிரயாண நன் மை, தன வருவாய். |
| மிதுனம் | உணர்ச்சி வசப்படல் ,அதிக செலவு, குடும்பக்கவலை, வேலைச் சுமை. |
| கடகம் | பெரியோர் சந்திப்பு, போசன சுகம்,புதிய முயற்சி, கல்வியில் ஆர்வம். |
| சிங்கம் | மனஸ்தாபம் ,சுபசெலவு ,சயனசுகக் குறைவு,பிரயாணம். |
| கன்னி | எடுத்த காரியம் கைகூடும்,தன வருவாய், கீர்த்தி, விருந்து பசாரம். |
| துலாம் | தொழில் மேன்மை, காரிய சித்தி, நண்பர்கள் உதவி, ஆரோக்கியம். |
| விருச்சிகம் | புதிய திட்டமிடல் ,எதிர்பாராத செலவு, முயற்சி தாமதம், பிரயாணம். |
| தனுசு | பயந்த சூழல், ஆரோக்கியக் குறைவு, காரிய தடங்கல், போசனசுகம். |
| மகரம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, முயற்சி பலிதம்,பொருள் சேர்க்கை, போசனசுகம். |
| கும்பம் | சத்துரு ஜெயம் ,மனமகிழ்ச்சி, காரிய அனுகூலம், உடல் நலம். |
| மீனம் | கௌரவககுறைவு, வியாபார விருத்தி ,வேலைச் சுமை, குடும் பக்கவலை. |

வளவன்

## கோரப்படாத மீளளிப்புகள் தொடர்பாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அங்கத்தவர்களுக்கு

ஊழியர் நம்பிக்கைப் பொறு ப்பு நிதியத்தின் அங்கத்தவர்களினால் நன்மைகளைப் பெறுவதன் பொருட்டு 31.12. 2008இற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்ட வங்கிக் கணக்களுக்கு வழங்கப்பட்ட காசோலைகளில் அதிக எண்ணிக்கையா னவை இச்சபைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை தலைவரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேற் குறிப்பிட்ட 31.12.200 க்குமுன்னர்நன்மைகளை மீளப் பெறுவதற்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் பின் வரும் விபரங்களை நிதி முகாமையளர் (கோரல்கள் கொடுப்பனவு) ஊழியர் நம்பிக்கை பெறுப்பு நிதியச்சபை த. பெ.இல 807 தொழிற் செயலர் தாரஹேன் பிட்டிய கொழும்பு-05எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் குறிப்பிட்ட திகதியில் சமர்ப்பிக்கத் தவறும் அங்கதவர்களின் கோரல்கள் தொடர்பில் இச்சபை பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**சமர்ப்பிக்க வேண்டிய தகவல்கள்.**

அங்கத்தவருடைய I முழுப் பெயர்.

II முதல் எழுத்துக்களுடன் பெயர்.

✦ முகவரி ✦ தேசிய அடையாள அட்டை இலக் கம் ✦ கோரலுக்கு வழங்கப்பட்ட தொகுதி இலக் கம்.

✦ தொழில் தருநருடைய பெயர்.

✦ ஊ.சே. நிதிப் பதிவு இலக்கம்/ அங்கத்தவர் இலக்கம்.

✦ வங்கி கணக்கு விபரங்கள்

1.வங்கியின் பெயர் 2.கணக்கு இலக்கம் 3. வங்கிக் கிளை 4. வங்கியின் முகவரி. (ஓ)

## இந்திய அரசின் அழுத்தத்தால் வான் தாக்குதல்கள் குறைவு

### சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

அண்மைக்காலமாக இந்தியாவினால் பிரயோகிக்கப்பட்டு வரும் அழுத்தங்கள் காரணமாக வான் தாக்குதல்கள் குறைவடைந்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற தாக்கு தல்களுடன் ஒப்பீடு செய்யும் போது தற்போது வெகு குறைவான தாக்குதல்களே இடம் பெற்று வருவதாக குறித்த ஊடகம் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த மாத ஆரம்பத்தில் நாளொன்றுக்கு 4 முதல் 5 தாக்குதல்கள் இடம்பெற்றதாகவும் கடந்த நான்கு தினங்களில் இரண்டு தாக்குதல்கள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை தரை வழியாக கிடைக்கப் பெற்ற புலனாய்வுத் தகவல்களைஅடிப்படையாகக் கொண்டு வான் தாக்குதல்கள் மேற்கொள்ளபபட்டதாகவும் கடந்த சில தினங்களாக இலக்குகள் குறித்த தகவல் எதுவும் கிடைக்கப் பெறவில்லை எனவும் விமானப் படைப் பேச்சாளர் ஜனக நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்திய அழுத்தம் காரணமாக வான் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை என அவர் தெரிவித்துள்ளார். மேலும் இந்திய எதிர்ப்பினால் இராணுவ நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படாதென பாதுகாப்பு தரப்பு தகவல் வெளியிட்டுள்ளது. (ச-5)

## மாணவர் கௌரவிப்பு

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ கிருஷ்ணா லயா நாடக மன்றத்தினால் இவ் வருட புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு எதிர் வரும் 25 ஆம்திகதி சனிக்கிழமை 3 மணிக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது. மன்றத் தலைவர் இ.சுரேஸ்கரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் ஐ.வைத்திலிங்கம் (சமாதான நீதிவான்) பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். அத்துடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ஓ-36)

## நூலக சாதனங்களின் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையால் யாழ். பொது சன நூலகத்தில் நடத்தப்படும் நூலக தகவல் சாதனங்களின் கண்காட்சி நேற்றிலிருந்து தொடர்ந்து 10 நாட்களுக்கு நடைபெற உள்ள தாக யாழ். மாநகரசபை வட்டாரங்கள் அறிவித்துள்ளது. (ஓ-6)

## கணனி வள நிலைய திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

உடுவில் மகளிர் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கணனி ஆய்வு கூட வள நிலையத்தின் திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.50மணிக்கு கல்லூரி அதிபர் ஷிராணி மில்ஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் முன்னாள் அதிபர் சரஸ்வதி ஞானபாக்கியத்தின் நினைவாக இக் கட்டடம் அமைக் கப்பட்டு திறக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக் கதாகும். (ஓ)




## சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை- 21

ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டின் ஆட்சியில், நேரடியாகவோ அல்லது சுதந்திரமான முறையிலோ தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்கு பெறுவதற்கு உரிமையுண்டு.

# விமான,கப்பல் பயணக் கட்டணங்களை மீளச் செலுத்துவதில் பொதுநடைமுறையை பின்பற்றுக

## அரச ஊழியர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட. அரசாங்க ஊழியர்கள் விடுமுறை கால புகையிரத ஆணைச் சீட்டுக் குப் பதிலாக விமானம் அல்லது கப்பல் பயணத்துக்கான கட்டணத்தை மீள வழங் கும் நடைமுறை திணைக்களத்துக்கு திணைக்களம் மாறுபட்ட விதத்தில் நடை முறைப்படுத்தப்படுவதால் உரிய தொகை யை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக கவலை தெரிவிக்கின்ற னர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரசாங்க ஊழியர்கள் விடுமுறைக் காலத்துக்கான புகையிரத ஆணைச்சீட்டை உரிய தேவைக் குப் பயன்படுத்த முடியாமல் இருப்பதால் விமானப் பயணத்துக்கு அல்லது கப்பல் பயணத்துக்கு அல்லது பேரூந்து பயணத் துக்கு செலுத்திய கட்டணங்களை புகையிரத ஆணைச்சீட்டை பயன்படுத்தி மீளப் பெற்றுக் கொள்வதற்கு வடக்கு மாகாண நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது.

இதுதொடர்பாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன் யாழ்.மாவட்ட திணைக்களத் தலைவர்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தி இருந்தார்.

விடுமுறைக்கால புகையிரத ஆணைச் சீட்டுக்குப் பதிலாக விமானம், கப்பல், பேரூந்து கட்டணமாக மீளக் கையளிக்கும் நடைமுறை யாழ்.மாவட்டத்தில் உள்ள திணைக்களத் தலைவர்களிடையே பொது மைப்படுத்தப்பட்ட முறையில் நடைமுறைப் படுத்தப்படாமல் திணைக்களத்துக்கு திணைக்களம் மாறுபட்ட விதத்தில் நடை முறைப்படுத்தப்படுகின்றது.

ஆசிரியர்களின் விடயத்தில் முதலாம் தவணையில் விமானப் பயணம் மேற் கொண்டால் முதலாம் தவணையில் கட்ட ணத்தை மீளப் பெற்றிருக்க வேண்டும்.

2ஆவது தவணையில் பயணம் செய்தி ருந்தால் 2ஆம் தவணையில் பெற்றிருக்க வேண்டும்.

3ஆம் தவணையில் பயணம் செய்தி ருந்தால் 3ஆம் தவணையில் கட்டணத்தை மீளப் பெற வேண்டும் எனக் கூறப்பட்டுள் ளது.

ஆனால் பயணக் கட்டணத்தை மீளப் பெறுவதற்கு மூன்றாம் தவணையில் மூன்று சோடி புகையிரத ஆணைச் சீட்டையும் ஒன் றாக சமர்ப்பித்து பயணக் கட்டணத்தை மீளப் பெறலாம் எனக் கூறப்பட்ட போதிலும் வலயத்துக்கு வலயம் மாறுபட்ட நடை முறை கள் பின்பற்றப்படுவதால் உரிய தொகை யைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற் பட்டு விடுவதாக கவலை தெரிவிக்கின்ற னர்.

''மாவட்ட ரீதியில் பொதுமைப்படுத்தப் பட்ட நடைமுறை பின்பற்றுவது விமானம் அல்லது கப்பல் பயணத்துக்கு செலுத்தப்பட்ட தொகையில் ஒரு பகுதியைத் தானும் பெற்றுக் கொள்ள முடியும்'' என ஆதங்கப்படுகின் றனர். (ஓ)

## தென்மராட்சி வலயத்தில் இணைப்பு பெற்ற ஆசிரியர்களுக்கு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்தில் வெளி மாவட்டங்களிலிருந்து தற்காலிக இணைப்பு பெற்று கடமையாற்றும் ஆசிரியர்கள் இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன் கிழமையும் தென்மராட்சி வலயக்கல்வி அலு வலகத்தில் தமது சம்பளப் பட்டியலில் கையொப்பமிடலாம் என வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் இ.சுப்பிரமணியம் பி.ஏ. எழுதிய ''சமூகஅறிவியல் இயற்கை விஞ்ஞானமும் கூட்டுறவு அபிவிருத்தியும்'' எனும் நூல் வெளியீட்டு விழா நாளை புதன் கிழமை முற்பகல்10 மணிக்கு வட மாகாண ப.தெ.வ.அ.கூ. சமாச மண்டபத்தில் சமாச தலைவர் சி. சந்திரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு) எஸ். கனகசபாபதி ஆகியோர் கலந்து கொள்வார் கள்.

நிகழ்வில் வெளியீட்டுரையை யாழ். பல்க லைக்கழக தமிழ்த்துறை தலைவர் எஸ். சிவலிங்கராஜாவும், ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி க.தேவராஜாவும் நிகழ்த் துவார்கள்.

முதற் பிரதியை மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் க. சிவ குமாரன் பெற்றுக்கொள்வார். (ஓ)

## வள்ளுவர் மன்றத்தின் காள்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

வள்ளுவர் மன்றத்தின் காள்கோள் விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சித்தன்கேணி வட்டு லயன்ஸ் கழக மண்டபத்தில் தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வாக சித்தன்கேணி சிதம் பரேஸ்வரர் ஆலய முன்றலிலிருந்து விழா மண்டபத்திற்கு திருவள்ளுவரின் திருவுரு வப்படம் ஊர்வலமாக எடுத்து வரப்பட வுள்ளது.

தொடர்ந்து ஆசியுரையை சித்தன்கேணி சிவன் தேவஸ்தான சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்களும், வாழ்த்துரையை நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச் சாரிய சுவாமிகளும்,ஸ்கந்தவரோதயாக் கல் லூரி அதிபர் ஆறு.திருமுருகனும் நிகழ்த்து வர்ாகள்.

அத்துடன் நா.தமிழேந்திரன்,ந. குகபரன் மற்றும் பண்டிதர் எஸ்.பி.சாந்தன் ஆகியோரால் திருவள்ளுவர் அரங்கம் நடத்தப்படும். (ஓ-27)

## யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியை தெரிவு செய்யும் பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி யினை தெரிவு செய்வதற்கான பயிற்சிகள் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந் தாட்ட திடலில் நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இப் பயிற்சியில் கலந்துகொள்ள விரும் பும் வீர, வீராங்கனைகளை வருகை தருமாறு சங்க செயலாளர் ர.சிறிரமணன் கேட்டுள் ளார். (ஓ)

## பரிசில் தினம்

(யாழ்ப்பாணம்)

வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியால யத்தின் பரிசில் தினம் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9மணிக்கு பாடசாலை அதிபர் கா.தருமரத்தினம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற ஆரம்பக் கல்வி, உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.சுவாமிநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ)

# கொழும்புத் தமிழ்ச்சங்கச் செயலாளரின் மறைவுக்கு பேராசிரியர் அ.சண்முகதாசின் இரங்கல் செய்தி

(யாழ்ப்பாணம்)

தமிழவேள் இ.க.கந்தசுவாமி அவர்கள் 19.10.2008 ஞாயிற்றுக்கிழமையன்று தன்னுடைய 90 ஆவது வயதிலே கொழும் பில் காலமானார். கொழும்புத் தமிழ்ச் சங்கத் தின் செயலாளராக நீண்டகாலமாகப் பணி யாற்றியவர்.

அவருடைய காலத்திலே கொழும்புத் தமிழ்ச் சங்கம் பல அரிய பணிக ளை ஆற்றுதற்கு அவர் பெரு முயற்சிகள் செய் தார். எங்களுடன் தொடர்புடைய ஒரு விடயத் தினை இவ்விடத்திலே சுட்டிக்காட் டுதல் பொருத்தமாயிருக்கும்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் , ஜப்பானிய இலக்கியமாகிய மன்யோசுவிலி ருந்து ஒரு பகுதியினைத் தமிழில் மொழி பெயர்த்தார். அப்பாடல்களுள் 30 பாடல் களை 30 சங்கப் பாடல்களுடன் ஒப்பிட்டு ஒரு நூலினை எழுதினார். இந்நூலை வெளியிட ஜப்பான் நிறுவனத்திடம் நூல் வெளியீட்டு நிதி கேட்டு விண்ணப்பித்த பொழுது கேட்ட நிதியினை அந் நிறுவனம் வழங்கியது.

ஆனால் இலங் கையிலுள்ள ஒரு நிறுவனத்தினூடாகவே அதனை வெளியி டலாம் எனக் கூறினர். அவ்வேளை கொழும் புத் தமிழ்ச் சங்க செயலாளர் தமிழவேள் இ.க.கந்தசுவாமி அவர்களுடன் தொடர்பு கொண்டோம்.


அவருடைய வேகமான அணுகு முறை யாலே அந் நூல் விரைவாக அச்சிடப்பட்டு வெளிவந்தது.

தமிழவேள் கந்தசுவாமி அவர்கள் ஈழத் துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகம் ஒன்றினை நிறுவி அதன் செயலாளராக நீண்டகாலமாகப் பணியாற்றி வந்தவர். அக் கழகம் சார்பாக தொல்காப்பியர் ஆய்வரங்கு ஒன்றினை ஒழுங்குசெய்து தமிழ்நாட்டு அறிஞர்களும் பங்குபற்றிய ஒரு பெரு விழா வாக அதனை நடத்தியதுடன் அதிலே படிக்கப் பட்ட கட்டுரைகளையெல்லாம் தொகுத்து நூலாகவும் வெளியிட்டுள்ளார்.

இம்மாதம் 11ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் சிலப்பதிகாரப் பெருவிழாவினை மிகச் சிறப்பாக நடத்தி முடித்தார். தன்னுடைய தள்ளாத வயதிலும் இப்படியொரு விழா வினை,தமிழக அறிஞர்க ளான பேராசிரி யர்களான அறவாணன், தாயம் மாள் அறவாணன்,புதுவைப் பல்க லைக்கழக அறிவுநம்பி, மு.பா. பாலசுப்பிர மணியம் ஆகியோர் பங்குபற்றிச் சிறப்புச் செய்த விழாவினை நடத்தி முடித்த மகிழ்ச் சியுடனே அப் பெருமகனார் இவ்வுலக வாழ் வை நீத்துச் சென்றுள்ளார்.

தனிமரம் தோப்பாகாது என்று கூறுவர். ஆனால் தமிழவேள் கந்தசுவாமி அவர்க ளைப் பொறுத்தவரையில் தனிமரம் தோப் பாகிய விந்தையினைச் சிலப்பதிகாரப் பெரு விழாவில் பங்கேற்ற நானும் மனோன் மணியும் சிவலிங்கராஜாவும் பிறரும் கண்டு கொண்டோம்.

தன்னை முன்னிலைப்படுத் தாது பிறர் எண்ணாத பெரும் பணிகளை ஆற்றி வந்தவர் அவர். இறைவனுடைய தாம ரைத் திருவடிகளிலே அப் பெரியாருடைய ஆன்மா அமைதி பெற்று இன்புற்றிருக்க வேண்டு கிறேன். (ஓ)



சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் அண்மையில் நடைபெற்றபோது சிரேஸ்ட மாணவ தலைவி செல்வி.சு.தேவகிக்கு கல்லூரியின் பகுதித் தலைவர் திருமதி ச.சிவானந்தன் சின்னம் சூட்டுவதைப் படத்தில் காணலாம். அருகில் அதிபர் வ.ஶ்ரீகாந்தன் காணப்படுகின்றார்.

# நோத் முதல் கோபல்லவா வரை 131

## சேர் யேம்ஸ் பீரிஸ் அவர்கள்


சேர்.ஜேம்ஸ்பீரிஸ் (1859-1954)

சிங்களவர் - முஸ்லிம்கள் கலகத்தின் காரணமாக ஆங்கிலேயர் திணித்த இராணுவ ஆட்சியின் பின் நடைபெற்ற முதலாவது பகிரங்கக் கூட்டத்திலே, பீரிஸ் தலைமை தாங்கி அரசியல் வாழ்வில் வெளி வெளியாகப் பிரவேசித்தார். தெறுபொருட் சட்டம் பிறப்பிக்கப் பட்டமையால் இராணுவத்தினரின் அட்டூழியங்களைப் பற்றி இலங்கையில் மேலும் ஏதுஞ்செய்ய இயலாமையால், இலங்கையர் சட்ட சபையிற்றிருத்தங் கோரி மறுபடியும் 1920 ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்குப் போக நேர்ந்தது. அதில் பீரிஸ் அவர்களும் உடன் சென்று மில்னர் பிரபுவைக் கண்டார். அருணாசலத்தின் பின்,யேம்ஸ் பீரிஸ் அவர்களே தேசிய காங்கிரஸ் தலைவராய்த் தெரியப் பட்டாராதலால் அவர் மில்னரிடம் தலைநிமிர்ந்து பேசக்கூடிய பொறுப்பும் இருந்தது, மனிங் அவர்களின் பிற்போக்கான திருத்தங்களைத் தேசிய காங்கிரஸ்காரர் நிராகரிப்பர் என்றே பீரிஸ் கூறினார்.

மனிங் திருத்தத்தின் வண்ணம் அமைந்த 1921 ஆம் ஆண்டுச் சட்டசபையில் பீரிஸ் போட்டியின்றித் தெரியப்பட்டார். அச்சட்ட சபைக் காலத்திலே உத்தியோகத்தரின் சம்பள உயர்வுக்காக மேலதிக வரிகள் பிரேரிக்கப்பட்ட போது உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்கள் வெளியேறியபோது அவர்களை வழி

**மீள் பார்வை**

நடத்தியவர் யேம்ஸ் பீரிஸ் அவர்களே. அங்ஙனம் உத்தியோகப் பற்றற்றவர் வெளியேறிய போது, உத்தியோக அங்கத்தவர் மாத்திரம் சபையில் இருந்தால் பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேற்றப்படும் என்று கண்ட புத்திசாலியான இராமநாதன் வெளியேறாமல் அங்கிருந்து பிரேரணைகளுக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்துப் பதிவுசெய்து கொண்டார் என்பது குறிப்பிடத் தகுந்தது.

டிவன்சயர் -மனிங் திருத்தத்தின் வண்ணம் அமைந்த சட்டசபையிலே நாற்பதுக்கு மேற்பட்ட அங்கத்தவர் மத்தியிலே நடுநாயகமாக சபாநாயகராய் பீரிஸ் இருக்கும் வாய்ப்பை இராமநாதனின் உதவியாற் பெற்றார். முன்னர் ஆள்பதிகள் சட்டசபைக்குத் தலைமை தாங்கிய காலங்களில் சபை சிறிதாகவே இருந்தது.

சட்டசபை அங்கத்தவரின் நன்மதிப்பை பெற்ற பீரிஸ் அவர்களைப் பிரித்தானிய அரசாங்கம் உரியமுறையிற் கௌரவித்து நைற் பட்டத்தை நல்கியது.சேர் யேம்ஸ் பீரிஸ் படிப்பில்லாதவர்களுக்கு வாக்குரிமை வழங்குவதைத் தீவிரமாக எதிர்த்தார். எனினும், அவர் இலங்கையில் கல்வி அபிவிருத்திக்காக அரிய பாடுபட்டுள்ளார். இலங்கைச் சர்வகலாசாலை நிறுவப்பட வேண்டுமென உழைத்த பெரியார்களுள் அவரும் ஒருவர், அவர் இருபதாண்டுக் காலமாக இலங்கைக்காக அரும்பணி புரிந்த பெரியார், அவர் சமூக சேவைத் துறையில் அதிகம் உழைத்தவர், அவருடைய அயரா உழைப்பினாலேயே இலங்கைச் சமூக சேவைச் சங்கம் 1915 ஆம் ஆண்டில் நிறவப்பட்டதாகும்.பீரிஸ் தம்முடைய மனச்சாட்சிக்குச் சரி யானதெனத் தாம் கண்ட அலுவல்களையே தீவிரமாகச் செய்து நிறைவேற்றுஞ் சுபாவம் உள்ளவர்.

பௌத்த குடும்பத்திலே பிறந்து கிறிஸ்தவராய் மதம் மாறி வாழ்ந்த அவரைப் பௌத்த மதத்தினரின் தொடர்பை நீக்குமாறும், அதற்காகப் பெரிய அலுவல்களைச் செய்து தருவதாகவும் ஆள்பதி சாமேஸ் கேட்டபோது, பீரிஸ் ஆள்பதியின் இலஞ்சத்தை அலட்சியஞ் செய்து தம் கொள்கையினின்றும் வழுவா தொழுகினார்.

இலங்கைச் சட்டசபை வரலாற்றுச் சுருக்கம் எழுதிய மெயின்மன் என்ற அப்புக்காத்தர் சேர்.யேம்ஸ் பீரிஸ் அவர்களைத் தலை சிறந்த சிங்களப் பெரியார் என்றும் அவர் அரசியலை முறையாகக் கற்ற அரசியல்வாதி என்றும் அவர் பெலத்துச் சத்த மிட்டுப் பேசும் பழக்கமில்லாதவர் என்றும் சிறந்தஅறிவாளியாய அவர் முன்னமேயே சட்டசபையில் நியமனம் பெறாதமை இலங்கையர் செய்த தவக்குறை என்றும் எழுதியுள்ளார்.



**க.சி.குலரத்தினம்**



பருத்தித்துறை பிரதேச செயலக சிறுவர் தினவிழாவும் சமுர்த்தி சமூக அபிவிருத்திமன்ற பரிசில் வழங்கும் விழாவும் அண்மையில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் தலைமையில் வரவேற்கப்படுவதையும்,பிரதம விருந்தினரான பருத்தித்துறை மேலதிக மாவட்ட நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா, சிறப்பு விருந்தினர்களான வடமராட்சி வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரமூர்த்தி ,பருத்தித்துறை காணிப் பதிவாளரும் மேலதிக மாவட்ட பதிவாளருமான திருமதி சரஸ்வதி தியாகராஜன் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-பரு.நிருபர்)

# தெற்காசியாவில் வறுமைக் குறைப்பும் 6 பொருளாதார வளர்ச்சியும்



ஆயினும் இவ்வாறு தனி இலக்கத்திற்கு (Single-Digit) வறுமையைக் குறைப்பதற்கு வேண்டிய பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தி நீடித்திருக்கச் செய்தல் என்பது சவால்கள் நிறைந்த ஒரு பணியாகவே உள்ளது.

**வளர்ச்சியை துரிதப்படுத்தி நிலைபேணுடையதாக்கல் - சவால்கள்**

* ***அதிகரிக்கும் பிராந்திய சமத்துவமின்மை***


தெற்காசியாவின் பொருளாதார வளர்ச்சியை அதிகரித்து நீடித்திருக்க (Sustain) செய்வது தொடர்பில் சமத்துவமின்மை என்பது முக்கிய சவாலாக அமைகின்றது. பிராந்திய ரீதியான அபிவிருத்தியின் வேறுபாடுகளை தெளிவுபடுத்துவதில் ''இரு இந்தியாக்கள்" (Two Indias) எனும் சொற்றொடர் தற்போது முன்வைக்கப்படுகின்றது.(விளக்கப்படம் 01 இனை நோக்குக).

2002 -2003 இல் இந்தியா முழுமைக்குமான தலா மொத்த உள்நாட்டு உற்பத்தி $480 ஆக இருந்தது. மொத்த சனத்தொகையில் 55% உடைய வறிய ஏழு மாநிலங்கள் , தேசிய சராசரி தலா GDP யின் 2/3 பங்கினைப் பெற்றுக் கொண்டிருந்தன. ஆனால் மொத்த சனத்தொகையில் 33% உடைய செல்வந்த ஏழு மாநிலங்களின் தலா GDP, வறிய ஏழு மாநிலங்களை விட இரு மடங்காக இருந்தமை குறிப்பிடத்தக்கது. மொத்த சனத்தொகையில் 25% இனை கொண்டுள்ள மிகப் பெரிய வறிய இரு வட மாநிலங்களான பீகார் மற்றும் உத்தரப் பிரதேசம் (UP) ஆகியவற்றின் தலா GDP, தேசிய சராசரியின் அரைவாசியை விடக் குறைந்தளவாக உள்ளதுடன் செல்வந்த ஏழு மாநிலங்களின் 1/3 பங்கு மட்டுமே ஆகும்.

மொத்த சனத்தொகையில் 21% உடைய ஆந்திரப்பிரதேசம் (AP) கர்நாடகம், கேரளா மற்றும் தமிழ்நாடு (TN ) ஆகிய நான்கு தென் மாநிலங்கள், இருவறிய வட மாநிலங்களை விட கூடிய தலாGDP இனை கொண்டுள்ளன.

மேலும் 5% சராசரிGDP வளர்ச்சி வீத

விளக்கப்படம் 01




தார வளர்ச்சி மட்டுமுடையதும் சனத்தொகை கூடியதுமான வட மாநிலங்களை விட மிக வேகமாக முன்னேறுகின்றமையானது பிராந்திய வறுமை இடைவெளியை மேலும் அதிகரிக்கும் .

அத்துடன் தற்போது வட மற்றும் தென் மாநிலங்களது தலை எண்ணும் சுட்டி (Head Count Index) இனை நோக்கின் அவை முறையே 35%, 18% என மிக வேறுபட்டுள்ளமை யும் கவனிக்கத்தக் கது.

இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டிற்கு வரு மானம் மற்றும் வறுமை யின் விளைவுகள் தொடர் பிலான பிராந்திய வேறுபாடு என்பது புதுமை யானதல்ல.

ஏனெனில் மிகச் சிறிய பொருளாதாரத்தினை கொண்டுள்ள இலங்கையிலேயே வருமானம், வறுமை ஆகியவற்றில் பிராந்தியங்களுக்கிடையில் பிரச்சினைக்குரிய- தீவிர சமத்துவமின்மை காணப்படுகின்றது.

கொழும்பு உள்ளடங்கலான மேல் மாகாணம், நாட்டின் சனத்தொகையில் 30% இனை கொண்டுள்ளதுடன் நாட்டின் GDP யில் 47% இற்கு காரணமாகவும் உள்ளது. அத்துடன் மேல் மாகாணத்தில் வறுமை யானது தேசிய வறுமை வீதமான 23% இன் அரைவாசியை விடக் குறைவாக 11% ஆக உள்ளது.

அத்துடன் கடந்த தசாப்தத்தில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு இம் மாகாணமே அதிக பட்சமான பங்களிப்பினை நல்கியுள்ளமையினை கடந்த 10 ஆண்டுகளில் மேல் மாகாணத்தின் GDP இற்கான பங்களிப்பானது 40% இலிருந்து 47 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளமையிலிருந்து விளங்கிக்கொள்ளலாம். வடக்கு கிழக்கு மாகாணங்களின் தேசிய பொருளாதாரத்தின் மீதான பங்களிப்பு திட்டமிட்டு குறைக்கப்பட்டுள்ளமையானது அரசின் பாரபட்சமான பிராந்திய அபிவிருத்தி செயற்பாட்டினை தெளிவுபடுத்துகின்றது.

தெற்காசியாவின் உட்பிராந்தியங்களுக்கிடையில் (Sub-region) பிரதேசங்களுக்கிடையில் கூட குறிப்பிடத்தக்க சமமின்மை காணப்படுகின்றது. பாகிஸ்தானில் பஞ்சாப் (Punjab) மாகாணகத்தின் மத்திய மற்றும் வட மாவட்டங்களானவை தென் மாவட்டங்களை விட மிகவும் விருத்தி குன்றியவையாக உள்ளன.

உயர்ந்த கல்வித்தரம் மற்றும் சிறந்த கீழ்க்கட்டுமானங்களுடன் வளர்ச்சியடைந்த மாவட்டங்கள் கூடுதலான முதலீடு களை கவருகின்றன. மேலும் சமமற்ற வளர்ச்சியானது வறுமை தொடர்பில் நகர, கிராம வேறுபாட்டினையும் தீவிரமாக்குகின்றது.

**விமலேந்திரன் பாரதிதாஸ்**
உதவி விரிவுரையாளர்
பொருளியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

அட்டவணை 5

**கிராம நகர வறுமை வேறுபாடு**

| நாடு | கிராமம் | நகரம் |
|---|---|---|
| நேபாளம் | 34.62% | 9.55% |
| பாகிஸ்தான் | 41.6% | 26.4% |
| இலங்கை | 24.7% | 7.9% |

*(மூலம் -உலக வங்கி -2006)*

தெற்காசியாவின் உயர்ந்த அதிகரிக்கும் வருமான சமமின்மை எதிர்கால பொருளதார வளர்ச்சி மற்றும் வறுமைக் குறைப்பு விடயங்களில் ஒரு தடையாக அமையும். (தொடரும்)

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

## க.பொ.த. சாதாரண பரீட்சை 2008 - பயிற்சி வினாத்தாள்- கணிதம்

### பகுதி A பரீட்சை XII நேரம் -40 நிமிடங்கள்

**A** — Answer

1 ஒரு வேலையை 4 மனிதர் 3 நாட்களில் பூர்த்தி செய்தால் அவர்கள் செய்த வேலையின் அளவு. ________

2 $2x-3y=5$ இல் y இன் குணகம் ________

3 நீளம் $\ell$ உம் அகலம் b உம் உடைய செவ்வகத்தின் பரப்பளவு ________

4 நான்கு நேர்கோடுகளால் அடைத்த மூடியவுருவின் பெயர். ________

5 ஆண்டு வட்டி 10% என்பதன் கருத்து. ________

6 3 , 5 , 7 , 9......என்ற கூட்டல் விருத்தியின் பொதுவித்தியாசம். ________

7 எனக்கு வயது இப்போது x ஆண்டுகள் 10ஆண்டுகளுக்கு முன்பு எனது வயது ________

8 ABCD ஓர் இணைகரம்.AB இற்கு சமனான பக்கம். ________

9 2a – 4 இன் ஒரு பொதுக்காரணி. ________

10 3m பக்க நீளமுடைய சதுரத்தின் பரப்பளவு ________

**B** — Answer

1 ஒரு வேலையின் $\frac{1}{3}$ ஐ 4 மனிதர் 3 நாட்களில் செய்து முடித்தால் அவர்கள் செய்த வேலை எத்தனை மனிதநாட்கள்? ________

2 $3x+3y=15$ ஆயின் ________

3 7m நீளமும் 1.3m அகலமுமுடைய ஒரு செவ்வகத்தின் பரப்பளவு யாது? ________

4 ஒரு நாற்பக்கலினது நான்கு அகக் கோணங்களினதும் கூட்டுத்தொகை. ________

5 வருடமொன்றுக்கு 10% வட்டிப்படி ரூபா 1000 கடன்பணத் துக்கு ஒரு வருட வட்டி ________

6 கூட்டல் விருத்தி ஒன்றில் $a=8, \ell=68,$ $n=20$ ஆயின் $S_n$ ஐக் காண்க. ________

7 எனக்கு இப்போது வயது x ஆண்டுகள் ஆகும். 10 ஆண்டுகளுக்கு முன்னர் எனது தகப்பனாரின் வயது என் வயதின் 4 மடங்காயின் தற்போது தகப்பனின் வயது யாது? ________

8 நாற்பக்கல் PQRS இல் , $\hat{P}=105°, \hat{Q}=65°$
$PS=QR$ a) $\hat{S}+\hat{R}$ இன் பெறுமானம்
b) PQRS எவ்வகை நாற்பக்கல்?
a)________
b)________


9 காரணிப்படுத்துக. $x^2-2xy$ ________

10 பரப்பளவு $4m^2$ உடைய ஒரு சதுரத்தின் மூலை விட்டத்தின் நீளம் யாது? ________

**C** — Answer

1 வேலை ஒன்றன் ஒரு பகுதியை பூர்த்தி செய்வதற்கு எஞ்சி யுள்ள மனித நாட்கள் எண்ணிக்கை 12 ஆகும்.
a)இவ்வேலையை 4 மனிதர்கள் எத்தனை நாட்களில் பூர்த்தி செய்வர்.
b)இவ்வேலையை 2 நாட்களில் பூர்த்தி செய்ய எத்தனை மனிதர்கள் தேவை.
a)________
b)________


2 $2x+5y=5$
$x-2y=3$
ஆயின் $x+y$ இன் பெறுமானம் ________

3


ABCD ஒரு செவ்வகம்
a)ABCD இன் பரப்பு a)________
b)AC இன் நீளம். b)________

4 ஒரு நாற்பக்கலின்
- எதிர்ப் பக்கங்கள் சமாந்தரமாயின்
- எதிர்ப் பக்கங்கள் சமமாயின்
- எதிர்க் கோணங்கள் சமமாயின்
- ஒருசோடி எதிர்ப் பக்கங்கள் சமனும் சமாந்தரமுமாயின்
- மூலைவட்டங்கள் ஒன்றையொன்று இருசம கூறிடுமாயின்

அது ஒரு இணைகரமாகும்.




△PQR இல் PO=OR ஆகும். QO ஆனது QO=OS ஆகுமாறு நீட்டப்பட்டுள்ளது. PQRS ஓர் இணைகரமென நிறுவ நீர் பயன் படுத்தும் தேற்றம் யாது? ________

5 பணத்தைக் கடனாகக் கொடுக்கும் மனிதன் ஒருவன் காலையில் ரூ500 ஐக் கொடுத்து அதே தினம் மாலையில் ரூ600 ஐப் பெறுகிறான். நாளொன்றுக்கு அவன் அறவிடும் வட்டி வீதம் யாது? ________

6 கூட்டல் விருத்தியொன்றில் $a=7, \ell=79,\ S_n=1075$ ஆயின் $n$ ஐ காண்க. ________

7 என்க்கு இப்போது வயது $x$ ஆண்டுகள்.10 ஆண்டுகளுக்கு முன்னர் எனது தந்தையின் வயது என் வயதின் 4 மடங்காயிருந்தது. எமது தற்போதைய வயதுகளின் கூட்டுத் தொகை 60 ஆண்டுகளாகும். $x$ இல் ஒரு சமன்பாடு அமைக்க. ________

8 உருவில் $Q\hat{P}S = S\hat{R}Q, PQ \,//\, SR, ST = \frac{1}{2}QS$



a) $\Delta PQS, \Delta RSQ$ எந் நிபந்தனைகளில் ஒருங்கிசையும்.
b) நாற்பக்கல் PQRS இன் சிறப்புப் பெயர் யாது?
a)________
b)________

9 காரணிப்படுத்துக. $x^2-9$ ________

10 செவ்வககாணி ஒன்றின் நீளமும் அகலமும் 3 : 2 என்ற விகிதத்தில் உண்டு.அதன் சுற்றளவு 60m எனின் அதன்
a) நீளம் யாது b) பரப்பளவு யாது?
a)________ b)________

**D** — Answer


**1** ஒரு குறித்த வேலையின் $\frac{2}{3}$ ஐச் செய்து முடிப்பதற்கு 8 மனிதர்களுக்கு 6 நாட்கள் எடுத்தன.
a) அவர்கள் செய்து முடித்த வேலையின் அளவு எத்தனை மனித நாட்கள்.
b) மீதி வேலையை 4 நாட்களில் செய்து முடிக்க எத்தனை மனிதர்கள் தேவை.
a)________
b)________

**2** பின்வரும் ஒருங்கமை சமன்பாட்டுச் சோடியை திருப் தியாக்கும் $x$ இன் பெறுமானத்தைக் காண்க

$$2x+2y=23$$
$$5x-2y=-9$$
________

**3** நீளம் 24cm உடைய செவ்வகமொன்றின் பரப்பளவு $168cm^2$ ஆகும்.
a) அகலம் எவ்வளவு?
b) ஒரு மூலைவிட்டத்தின் நீளம் யாது?
a)________
b)________

**4** ABCD ஓர் இணைகரம். AE=EB,DF=FC




a) AECF ஆனது இணைகரம் என நிறுவுவதற்கு நீர் பயன்படுத்த வேண்டிய தேற்றத்தை எழுதுக.
b) AC,BD,EF ஆகிய நேர் கோடுகள் ஒரு புள்ளியின் ஊடு செல்லும் என்பதற்கான காரணத்தை எழுதுக.
a)________ b)________

**5** ஒருவர் 12% ஆண்டு எளிய வட்டிக்கு ரூபா 24,000 ஐ கடனாகப் பெறுகிறார்.2 ஆண்டுகளின் இறுதியில் கடனிலிருந்து விடுபடுவதற்கு அவர் கொடுக்க வேண்டிய மொத்தப் பணத்தைக் காண்க. ________

**6** கூட்டல் விருத்தி ஒன்றின் முதலாம் உறுப்பு 8உம் கடைசி உறுப்பு 128உம் ஆகும். உறுப்புகளின் கூட்டுத்தொகை 2788 எனின் அக்கூட்டல் விருத்தியின்
a)உறுப்புகளின் எண்ணிக்கையையும்
b)பொதுவித்தியாசத்தையும் காண்க.
a)________
b)________

**7** எனக்கு இப்போது வயது $x$ ஆண்டுகள் ஆகும். 10 ஆண்டுகளுக்கு முன்னர் எனது தகப்பனாரின் வயது என் வயதின் நான்கு மடங்காயிருந்தது. எமது தற் போதைய வயதுகளின் கூட்டுத்தொகை 60 ஆண்டுக ளாகும்.சமன்பாடொன்றை அமைத்து எமது தற்போதைய வயதுகளைக் காண்க. ________

**8** PQRS,PQAB இரு இணைகரங்கள்.அதில் PR=PB , PS=PA ஆகும்.



a) △PABயும் △PRSஉம் எந்நிபந்தனையின் கீழ் ஒருங்கிசையும்.
b) x + y + z இன் பெறுமானம் யாது?
c) $A\hat{P}S$ ன் பெறுமானம் யாது?
a)________
b)________
c)________

**9** காரணி பற்றிய அறிவைப்பயன்படுத்தி $67^2-17^2$ இன் பெறுமானத்தைக் காண்க. ________

**10** 12m நீளமும் 8m அகலமும் கொண்ட ஒரு மண்டபத்தின் தரையில் சதுரத் தரைக் கற்கள் பதிக்கப்படவுள்ளன.சதுரக்கல் ஒன்றின் பக்கம் 25cm எனின் இதற்குத் தேவைப்படும் தரைக்கற்களின் எண்ணிக்கை யாது? ________

ஜே.மரியநாயகம்

| | A | B | C | D | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | | | | | |

# செயற்கை முறைக் கருத்தரிப்பும் அதற்கான வழி முறைகளும்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம் முதலியவைகளில் இருந்து பல்வேறு விருதுகளும், மருத்துவத்துறையில் சிறப்பான சேவைக்காக "ராஷ்டிரியரத்ன" ஜனாதிபதி விருது, இந்திரா காந்திவிருது ஆகிய பல விருதுகளை பெற்றவரும் மதுரையில் சோதனைக்குழாய் குழந்தை மருத்துவத்தில் புகழ் பெற்ற டாக்டர் மனோரமா குழந்தையின்மை தொடர்பாக வழங்கிய ஆலோசனைகள்.

சோதனைக்குழாய் குழந்தையைப் பொறுத்தவரை எல்லோரும் பயப்படுவதற்கு காரணம் என்னவென்றால் கணவனின் விந்தணுவை மாற்றி விடுவார்களோ என்ற பயம் தான். இது மருத்துவத் துறையைப் பற்றி சரியான விழிப்புணர்வு இல்லாமையால் வருகிறது.

ஆணிடம் இருந்து நான்கைந்து விந்தணுக்கள் கிடைத்தாலே அதைக் கரு உருவாக்கத்திற்குப் பயன்படுத்தலாம். தேவைப்பட்டால் கணவனின் ஒப்புதலின் பின்னாலேயே தான் விந்தினைப் பெறவேண்டும் என்பது சட்டமாகும். இந்த மருத்துவத்தைப் பொறுத்த வரை பெண்ணின் கருமுட்டை உருவாக்கத்திற்குப் போடப்படும் ஊசியின் விலைதான் கொஞ்சம் அதிகம். மருந்துவம் உடனே பலனளித்தால் விட்டால் ரூபாய் 20,000க்குள் (இந்திய மதிப்பில்) முடிந்துவிடும். தேவையான கரு கிடைக்கா விட்டாலோ, தம்பதியினருக்கு அதிக வயதாகி இருந்தாலோ, கருப் பையில் "சாக்லைட்



இரத்தக்கட்டிகள்" இருந்தாலோ இவற்றைச் சரி செய்து, எல்லா மருத்துவச் செலவுகளையும் முடிக்க ஊசி மருந்து மட்டுமே ஒன்றிலிருந்து ஒன்றரை இலட்சம் (இந்தியமதிப்பு) வரையே ஆகும்.

யோசித்துப் பார்த்தால் சோதனைக் குழாய்க் குழந்தை என்பது மிக எளிமை யான ஒன்று தான். கருக்குழாயில், கருவும் விந்தணுவும் கூடுகின்ற நிகழ்வினை இந்த மருத்துவத்தில் வெளியில், ஆய்வகத்தில் செய்கிறோம்.

கருவுற்றதை எடுத்து மீண்டும் தாயின் கருப்பையில் வைத்து விடுவது தான் இந்த மருத்துவத்தின் வேலை யாகும். பெண் கருவையும் விந்து வையும் இணைக்க நடக்கும் 48 மணி நேர ஆய்வகச் செயல்பாடு ஒன்றுதான் இந்த மருத்துவத் தைப் பொறுத்தவரை சிரத்தை யான வேலையாகும்.



Dr.மனோரமா
Ph.0091 452 2534011/2524545

முன்பெல்லாம் குழந்தையின்மை என்றாலே பெண்களுக்குத் தான் குறைபாடு இருக்கும் என்ற தவறான கண்ணோட்டம் இருந்தது. தற்போது நல்ல விழிப்புணர்வு ஏற்பட்டு இருக்கின்றது. ஆணோ, பெண்ணோ இரு பாலருக்கும் மன அழுத்தம், உளவியல் தொடர்பான பிரச்சினைகள் இவற்றால் கூட மலட்டுத்தன்மை ஏற்படு கின்றது. வேதியியற் தொழிற்சாலையில் இருக்கும் வேதிப்பொருள் பாதிப்புகளால் கூட இருபாலருக்கும் மலட்டுத் தன்மை ஏற்படுகிறது. பெண்களைப் பொறுத்தவரை 40% கரு முட்டை உற்பத்தியில்லாமையால் தான் குழந்தை யின்மை ஏற்படுகின்றது.

இந்தக் குறைபாடு,பிட்யூட்ரீச் சுரப்பி சரி யாக வேலை செய்யாதது,நிறைய அகச் சுரப்பிக் கோளாறுகள்,கருக்குழாயில் சவ்வு பிடித்திருத்தல் போன்ற கோளாறுகளால் ஏற்படு கின்றது. சிறு வயதில் பெண்களுக்கு டி.பி (காச நோய்) போன்றவை ஏற்பட்டு அதைச் சரியாகக் கவனிக்காமல் விட்டால் அது கருப் பையைத் தாக்கிப் பெண்ணை பருவமடையாமல் கூடச் செய்துவிடுகிறது. நாள்பட்ட குடல் வால்வினாலும் இந்தக் குறைபாடு ஏற்பட வாய்ப்புண்டு, ஏனெனில் கருக் குழாயும்,குடல் பகுதியும் அருகருகே இருப்பதால் சவ்வு கருக்குழாயையும் பாதிக்கிறது.

திருமணத்திற்குத் தகுந்த வயதுடைய ஆண்,பெண் தாம்பத்திய வாழ்க்கையில் ஓர் ஆண்டுகாலம் வரை கருத்தரிக்கவில்லை யெனில் உடனேயே மருத்துவரை அணுகுவது அவசியம். இருவருக்கும் உள்ள குறை களைக் கண்டறிந்து அதற்குத் தக்க முறைகளைக் கையாள வேண்டியதும், சிகிச்சை பெறுவதும் இன்றியமையாதது. ஜக்ஜ என்ற முறையில் முதிர்ந்து வெடித்த கருவுக்குள் குழாய் மூலம் விந்தினைச் செலுத்திக் கருவுற வைத்தல் நிகழ்த்தப் படுகிறது. ஆணுக்கு ஒரு குறைபாடும் இல்லாமலிருந்தும் கருவுறாமல் இருந்தால், கருவுறலுக்கு மேற்கண்ட முறை பயன் படுத்தப்படுகிறது.

சோதனைக் குழாய் கருத்தரிப்பின் வயது வரம்பு பெரும்பாலும் 45-50 வயதுக்குள் "மொனோ பஸ்" காலம் முடிந்து விடுகிறது. அதற்குப்பின் கருத்தரிப் பினை நிகழ்த்த, கருவினைத் தானமாகத்தான் வாங்க வேண்டும்.

58வயதுவரை பெண் கள் செயற் கை முறையில் கருத்தரித்துக் குழந்தை பெற்றுக் கொள்ளலாம். (சரா கசி என்னும் முறையில் வாடகைத்தா யின் கருவில்வைத்தும் குழந்தையைப் பெற்றுக்கொள்கின்றனர்). கரு முட்டையை உறைய வைத்தல் முறை பெண்ணிடம் இருந்து எடுக்கப்பட்ட, பயன்படுத்தியது போக மீதமுள்ள கரு முட்டைகளை "எலக்ட் ரிக்கல் பிரிசரில்" வைத்துப் பாதுகாக்கின்றோம். கருவுற்ற பெண் பிரசவித்த ஆறு மாதங்களுக்குப் பின் எடுத்து வைக்கப்பட்ட கரு முட்டையை மீண்டும் பயன்படுத்திக் குழந்தை பெற்றுக் கொள்ள லாம். "கரு முட்டையை உறைய வைக்கும் இந்த முறை யிலேயே" பாதுகாக் கப்பட்ட ஆணின் விந் தினை ஜக்ஜ முறை, முதலான பல்வேறு முறைகளில் பயன் படுத்தலாம்.

ஆனால் புதிதாக எடுக்கப்பட்டதைவிட இம் முறை யில்பலன் குறைவாகவே கிடைக்கிறது.

சோதனைக்குழாய் குழந்தையும், இயற்கையான குழந்தை யும் சோதனைக் குழாய் முறையில் கருவுற்ற கரு முட்டையில் உள்ள செல்களில் ஒன்றைஎடுத்து முறையில் அதன் மரபுக் கூறில் ஏதேனும் நோய்ப்பாதிப்பு இருக்கிறதா என்று கண்டறியலாம். இதைப் பயன்படுத்தி நோய்ப் பாதிப்பு இல்



லாத நல்ல கருவினைத் தேர்ந்தெடுக்க முடியும்.

கருவுறுதல் மட்டுமே செயற்கை , மற்றபடி தாயின் கருவறையில் இயற்கையாகவே வளர் வதால், இயற்கையாகப் பிறந்த குழந்தைகளுக்கும், சோதனைக்குழாய் குழந்தைக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை. எனவே சோதனைக்குழாய் முறையின் மூலம் பிறக்கும் குழந்தைகளுக்கு பாதிப்புகள் இருக்கும் என்ற கவலை தேவையற்றது.

மகப்பேறு மருத்துவத்தைப் பொறுத்த வரை பெரும்பாலான குறைகள் உளவியல் குறைபாடுகளால், உளவியல் பாதிப்புகளால் ஏற்படுபவையே ஆகும். எயிட்ஸ் பாதித்த பெண்களுக்கும் சோதனைக்குழாய் மூலம் கருத்தரிப்பு செய்தல் சாத்தியமே. ஆனால் அவர்களுக்கெனத் தனி ஆய்வகங்கள், தனிப்பட்ட முறையில் 'இன்குபேட்டர்' ஆகியவற்றை அமைக்கவேண்டும். கருவிலிருக் கும் குழந்தைக்கு எயிட்ஸ் நோய் பாதிப்பு வராமல் தடுக்க தற்போது பல்வேறு மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. எயிட்ஸ் நோயாளிகளுக்கு சோதனைக் குழாய்க் கருத்தரிப்புச் செய்வதற்கான செலவுதான் கொஞ்சம் அதிகமாக இருக்கும். நோயாளிகளின் மனவுறுதிதான் இதைப் பொறுத்த வரை முக்கியமானதாகும்.

"இனிமேல் நமக்குக் குழந்தையே கிடையாது" - என்று மூலையில் முடங்கிக் கிடந்த பெண்களுக்கு ஒரு. வரப்பிரசாதமாக கிடைத்திருக்கக் கூடிய சோதனைக் குழாய் மருத்துவத்தை செய்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்கு மருத்துவத்தின் மூலம் குழந்தையை கையில் கொடுக்கும்பொழுது கிடைக்கும் மனமகிழ்ச்சிக்காக எவ்வளவு வேண்டுமானாலும் கஷ்டப்படலாம்.




# நவீன அறுவை சிகிச்சை, மகப்பேற்று சிகிச்சை பற்றிய மருத்துவ நிபுணர்களின் விளக்கங்கள்

உள்நாடு மற்றும் வெளிநாடுளில் இருந்து சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கான ஒரே இடத்தில் அனைத்துவசதிகளையும்கொண்டு, தமிழக நகரான காரைக்குடியில் இயங்கிவரும் பிரபல கவிதா மருத்துவமனையின் இயக்குநராக பணியாற்றிவரும் டாக்டர் ரமேஷ் மற்றும் டாக்டர் கவிதா ரமேஷ் ஆகிய தம்பதிகள் லேப்ராஸ்கோப் ,எண்டோஸ்கோப் மற்றும் மகப்பேறு தொடர்பான சந்தேகங்களுக்கு வழங்கிய விளக்கங்கள்...

**லேப்ராஸ்கோப்பில் எந்தெந்த அறுவைச் சிகிச்சைகளைச் செய்ய முடியும்?**

லேப்ராஸ்கோப்பில் அடிப்படையான லேப்ராஸ்கோப், நவீனமான லேப்ராஸ்கோப் என இரு வகைகள் உண்டு.அடிப்படையான குடல்வால்வு, கல்லடைப்பு,உடலுக்குள் ஏதேனும் வெளிப் பொருட்கள் ஒட்டியிருப்பதுமுதலியவற்றைச் சரி செய்யலாம். இதன் பெரிய பயன்பாடுகளில் ஒன்று, பெண்களுக்கான கர்ப்பப்பையை நீக்குவதில் பயன்படுவதர்கும். இதன் சிறப்பு என்னவென்றால் சிகிச்சை செய்து கொண்ட ஒரு வாரத்திலேயோ,ஓரிரு நாட்களிலேயோ அனைத்து வேலைகளையும் வழக்கம்போல் செய்யமுடியும். நவீனமான லேப்ராஸ்கோப் புற்றுநோய் முதலான அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படுகிறது.

**மருத்துவத்துறையில் எண்டோஸ்கோப் எந்தெந்த வகையில் பயன்படுகிறது?**

எண்டோஸ்கோப்பைப் பொறுத்தவரை அப்பர் எண்டோஸ்கோப்,லோயர் எண்டோஸ் கோப் என்று இரண்டு வகை உண்டு.இவற்றுள்ள அப்பர் எண்டோஸ்கோப் மூலம் வயிற்றில் சிறுகுடலின் பகுதிகளை 8முதல் 10செ.மீ.வரை உள்ளே டியூப் பின் மூலம் பார்க்க முடியும். இதைப் பயன்படுத்திக் குடல்புண்,இரத்தப்போக்கு ,புற்றுநோய் போன்றவற்றைக்கண்டறியலாம்.அற்கஹோல் பாதிப்பால் வயிற்றுக்குள் இரத்தக்குழாய் வீங்கி வெடித்துள்ளதா என அறியவும், அதை "ஸ்டீரே தெரபி" மூலம் குணப்படுத்தவும் எண்டோஸ் கோப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.எண்டோஸ்கோப் நோய்ப் பாதிப்புக்கான காரணத்தைக் கண்டறியவும் (டையக்னோஸ்டிக்) குணப்படுத்தவும் (தெர பிடிக்) பயன்படுகிறது என்பதில் மாற்று கருத்து இல்லை.

லோயர் எண்டோஸ்கோப் என்பது ஆசன வாய் வழியாகப் பெருங்குடல், மலக்குடல் பகுதிகளைப் பார்க்கப் பயன்படுகிறது. மலத்தில் இரத்தம் வெளிப்படுவதற்கான காரணம் புற்றுநோயா அல்லது மூலமா எனக் கண்டறியப் பயன்படுகின்றது.

**மூலம், குடல் வால்வு போன்ற பிரச்சினைகளுக்குஎந்த வகையான சிகிச்சை முறைகள் பயன்படுத்தப்படுகின்றன?**

குடல்வால் போன்ற பிரச்சினைகளைச் சரிசெய்வதில் "லேப்ராஸ்கோப்" பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றது. இந்தியாவைப் பொறுத்தவரை மூலத்தைச் சரிசெய்வதில் வெளி -அறுவைச் சிகிச்சை (Opean Surgery) மற்றும் லேசர் சிகிச்சைபோன்றவை பயன்படுத்தப்படுகின்றன. கட்டிகள் உள்ளே இருந்தால் லேப்ராஸ்கோபியைப் பயன்படுத்திச் சரி செய்துவிடலாம்.கட்டி பெரிதாக இருப்பினும், சின்னத்துளை வழியாகவே சிறிது சிறிதாக வெட்டி எடுக்கும் அளவுக்குத் தற்போது மருத்துவம் வளர்ந்துள்ளது.

**லேப்ராஸ்கோப் மூலம் சிகிச்சை செய்ய எவ்வளவு நேரம் ஆகும்?**

அந்தந்த மருத்துவர்களின் அனுபவ அறிவினைப் பொறுத்தே எவ்வளவு நேரமாகும் என்பதைக் கூறமுடியும், பெரும்பாலும் அனுபவம் மிக்கவர்கள் ஒரு மணிநேரத்தில் செய்துவிடுவார்கள்.


மலைமேல் இருந்து ஒரு சிறிய கிராமத்தைப் பார்ப்பதுபோல அனைத்துப் பாகங்களையும் ஒரு சிறு துளை மூலம் பார்த்து சிகிச்சை செய்யலாம், பாதிக்கப்பட்ட இடத்தைத் தவிர,மற்ற இடங்களில் பாதிப்புள்ளதா எனவும் பார்க்கமுடியும்.இது வெளி-அறுவைச் சிகிச்சையில் இல்லாத ஒரு சிறப்பம்சமாகும். வெளி அறு வைச் சிகிச்சைக்குப் பத்து நாள் வரை ஆகும்.பெரிய "ஹர்னியா" கட்டிகள் இருந்தால் அதற்கு வெளி அறுவைச் சிகிச்சை தக்க வழியாகும். சிறிய ஹர்னியா கட்டிகளுக்கு லேப்ராஸ்கோப் மூலம் சிகிச்சை செய்யலாம்.

**லேப்ராஸ்கோப்பைப் பயன்படுத்தி தாங்கள் செய்த அறுவைச் சிகிச்சைகளில் அரிதான ஒன்றைப் பற்றிக் கூறுங்கள்?**

72 வயதான முதியவர் ஒருவருக்கு 8 இடத்தில் பெரிய "ஹர்னியா" கட்டிகள் வந்திருந்தன. வயதான காரணத்தால் அறுவைச் சிகிச்சை செய்ய முடியாது என்று மருத்துவர் பலரும் கை விரித்த பின்,அவர் எங்களிடம் வந்தார். அவருக்கு அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாக முடித்தோம், கட்டிகளை அகற்றி மீண்டும் வராத அளவுக்கு நுட்பமாக, சிரத்தையாகச் சிகிச்சையைச் செய்தோம் அறுவைச் சிகிச்சையில் நீக்கப்பட்டாலும் ஹர்னியா கட்டிகள் மீண்டும் வரும் என்ற நிலையை மாற்றிக் காட்டியுள்ளோம். இப்போது அவர் நலமாக இருக்கிறார்.

**மார்பகப் புற்றுநோய்க்கு "லேப்ராஸ்கோப்" மூலம் சிகிச்சை செய்ய முடியுமா?**

முடியும். முன்பெல்லாம் மார்பகப் புற்றுநோய் வந்த பெண்களின் மார்பை அப்படியே எடுத்து விடுவார்கள். தற்போது மேல் தோல் அப்படியே இருக்க, புற்றினை மட்டும் எடுக்குமளவுக்குத் தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. பழைய மார்பினை மீண்டும் கொண்டு வரமுடியும். ரேடியோ தெரபி, டார்கெட் தெரபி மூலம் புற்றுநோய்கள் பரவுவதையும் தடுக்கமுடியும்.



**எந்தெந்தக் காரணங்களுக்காக "பிரசவ அறுவைச் சிகிச்சை" (சிசேரியன்) செய்கிறார்கள்?**

25-30 வயதுக்குப் பின் சோதனைக்குழாயின் மூலமோ அல்லது இந்த வயதிற்குப் பின் திருமணம் செய்துகொள்ளும் பெண்களுக்கோ இயற்கையான பிரசவத்திற்கு தக்க உடல் வலு இருப்பதில்லை. இத்தகைய பெண்களுக்கு அறுவைச் சிகிச்சையின் மூலம் பிரசவம் பார்க்கிறார்கள். குழந்தை தலை பிரண்டு இருத்தல் இயற்கையான பிரசவத்தில் பிரச்சினை உள்ள பட்சத்தில் அறுவைச் சிகிச்சை மூலம் பிரசவம் பார்க்கப்படுகிறது.

**கருக்கலைத்தல் எந்தக் காரணத்தினால் ஏற்படுகின்றது?**

கருவிலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் தொப்புள் கொடி வழியாகவே ஊட்டப் பொருள் கள் செல்கின்றன அந்தப் தொப்புள் கொடியின் வழியாகச் செல்லும் இரத்த ஓட்டத்தில் தடையோ அடைப்போ ஏற்படும் பொழுது குழந்தைக்கு எந்தச் சக்தியும் கிடைப்பதில்லை எனவே கருகலைகிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க பிராக்சோ பிராடல் என்ற ஊசியினைக் கருவுற்ற 50 நாளிலி ருந்து பிரசவம் வரை தொடர்ந்து போட்டுக் கொள்ள வேண்டும்.

**டின்.என்.சி.யை பெண்கள் எப்பொழுது செய்துகொள்ள வேண்டும்?**

பெரும்பாலும் டி.என்.சி முறையில் கருக் கலைப்பு செய்வதை நாங்கள் பரிந்துரை செய்வது இல்லை அவ்வாறு செய்தால் கருக்கலைப்பினை கருவுருவாகி 3 மாதங்களுக்குள் செய்ய வேண்டும் இரண்டாம் முயற்சியாக 5 மாதங்களுக்குப் பின்னும் செய்யலாம். கருத்தரிக்காமல் இருப்பதற்காக முறையான காப்பர் -டியினையே பெரும்பாலும் பரிந்துரைக்கின்றோம் .பிரசவத்திற்கு 60 நாட்களுக்குள் பின்னரோ 6 மாதங்களுக்குப் பின்னரோ மாதவிலக்கினைத் தொடர்ந்து இந்தத் தடுப்பு முறையைச் செய்துகொள்ளலாம். மாத்திரையின் மூலமும் கருவுறுவதைத் தடுக்கலாம்.

**கர்ப்பப்பை என்னென்ன காரணங்களுக்காக நீக்கப்படுகிறது?**

கர்ப்பப்பையில் பிரச்சினைக்குரிய கட்டிகள் ஏற்பட்டுத் தொல்லை தரும் பொழுது கர்ப்பப்பை உடல் நலத்தின் பொருட்டு நீக்கி விடுகின்றார்கள். நாளமில்லாச் சுரப்பிகளின் சமநிலையற்ற தன்மையினால் கர்ப்பப்பையில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதனால் வரும் தீயவிளைவுகள் தவிர்ப்பதற்காகவும் கர்ப்பப்பையை நீக்கி விடுகிறார்கள். பிரசவத்தின் போது ஏற்படும் அதிகப் படியான இரத்தப் போக்கினைத் தடுத்து நிறுத்தவும் கர்ப்பப்பையை நீக்கி விடுகின்றார்கள். கர்ப்பப் பையை நீக்கத் தற்போது லேப்ராஸ் கோப் பயன்படுத்தப்பட்டு வருகிறது இதன்மூலம் வலியில்லாமல் குறைந்தநேரத்தில் கர்ப்பப்பையை நீக்கமுடியும்.


**இளமை மற்றும் முதுமைப் பருவத்தில் பெண்களுக்கு வரும் பிரச்சினைகள் என்ன?**

பெண் பருவம் அடைந்த காலம் தொட்டு பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்கிறாள் அதிலும் குறிப்பாகத் திருமணத்திற்கு முற்பட்ட பருவம், குழந்தை பேறு எடுக்கும் பருவம் மெனோபஸுக்கு முற்பட்ட பருவம், மொனோபஸுக்கு அடுத்த பருவம் என்ற நான்கு பருவத்தில் உள்ள பெண்கள் உடல் அளவில் பல்வேறு பாதிப்புக்குள்ளாகின்றனர். தொடர்ந்த பிரசவங்களால் பெண்களின் கர்ப்பப்பை கீழ் நோக்கி இறங்குகிறது சிறு நீர் தொடர்பான பிரச்சினைகளும் பலவாறாக ஏற்படுகின்றன. கர்ப்பப்பை கற்களும் ஏற்படுகின்றன. (தற்போது அந்தக் கற்களை நீக்கி விட்டு கர்ப்பப்பையை பாதுகாக்கும் முறைகளும் உள்ளன) .பிரச்சினைகளை தவிர்க்க கருவுற்ற பெண்கள் உடல் நிலை முழுவதுமாக சோதனை செய்து கொள்ள வேண்டியது அவசியம். மேலும் பிரசவ காலத்தில் பெண்களின் உடல் நிலையை சீராக வைத்துக்கொள்ள உடற் பயிற்சிகள் பல்வேறு வகைகளில் உள்ளன. அதிக மன அழுத்தத்தைக் குறைக்க தியானம், யோகா போன்ற பயிற்சிகளும் செய்ய வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு
தொடர்பு கொள்ள தொலை பேசி
0091-4565-225722/226322

# சேது சமுத்திரத்திட்டம் நிறைவேறுவதை இலங்கை அரசாங்கம் விரும்பவில்லை

## கருணாநிதி தெரிவிப்பு



(சென்னை)

தமிழகத்துக்கு வளமும், வலி மையும் சேர்க்கப்போகும் சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறுவதை இலங்கை அரசு விரும்பவில்லை என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் எதிரில் ரூ. 98 கோடி செலவில் கட்டப்பட்ட 1.6 கீ.மீ. நீளமுள்ள புதிய மேம்பாலத் திறப்பு விழா ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது. மேம்பாலத்தைத் திறந்து வைத்து கருணாநிதி பேசுகையில்,

சோனியா காந்தியின் ஆலோசனையின் பேரில், பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நடைபெறும் மத்திய அரசு தமிழகத்தை சீராட்டி, பாராட்டி வாழ வைக்கின்ற அரசாக உள்ளது.

மத்தியில் தற்போது தமிழர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற ஆட்சி நடைபெறுகிறது. அமைச்சரவையில் வெளியுறவுத் துறையை வாங்கியிருந்தால் இந்நேரம் இலங்கை சென்று தமிழர்களை மீட்டிருக்கலாம் என்று பைத்தியக்காரத்தனமான கருத்து உலவுகிறது.

எந்தத் துறையானாலும், வெளி நாட்டைப் பற்றி ஒரு முடிவை எடுக்கும் அதிகாரம் பிரதமருக்குத்தான் உண்டு என்பதை அரசியல் தெரிந்தவர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள்.

மத்திய அரசு சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை டி.ஆர். பாலுவிடம் அளித்துள்ளது. அவர் அந்தத்திட்டத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பார். அவர் பெற்றிருக்கும்துறை, தமிழகத்தை வளம் பொருந்திய மாநிலமாக மாற்றுவதற்கு உரிய துறை இத் திட்டத்தின் 75 சதவீதப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், அதைத் தடுக்க சிலர் முயற்சிக்கின்றனர். குறிப்பாக நமது அண்டை நாட்டின் அரசு சேது சமுத்திரத் திட்டத்தை நாம் நிறைவேற்றுவதை விரும்பவில்லை.

தமிழகம் பலம் பொருந்துவதாக, வளம் பொருந்துவதாக மாறுவதை விரும்பாத சிங்களவர்கள் சில தமிழர்கள் மூலமாக இத் திட்டத்துக்குத் தடை போடுகின்றனர்.

சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றாவிட்டால் தமிழகம் பாழாகிவிடும். எனவே இத் திட்டத்தை எப்படியும் நிறைவேற்றியே தீருவோம் என்று அதிமுகவின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

ஆனால் அவர்கள் இப்போது இத் திட்டத்தை தடுத்தே தீருவோம் என்று கூறுகின்றனர். எனவே அவர்களை பொதுமக்கள் வைக்க வேண்டிய இடத்தில் வைக்க வேண்டும். ஒதுக்க வேண்டிய இடத்துக்கு ஒதுக்க வேண்டும் என்றார் கருணாநிதி. (ஓ)

## இலங்கைப் பிரச்சினை தொடர்பாக ஆசிரியர்கள் உண்ணாவிரதம்

(திருவாரூர்)

இலங்கை தமிழர்களைக் காக்க வேண்டும் என வலியுறுத்தி எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை இராமேஸ்வரத்தில் 5ஆயிரம் ஆசிரியர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுப டுவார்கள் என்று தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மன்றத்தின் பொதுச் செயலர். க. மீனாட்சிசுந்தரம் தெரிவித்துள்ளார்.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தியும் இப் போராட்டம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ)

# வடபகுதி வாழ் தமிழ் மக்களை இந்தியா பாதுகாக்க வேண்டும்

## டில்லியில் தமிழ்த் தலைவர்கள் கோரிக்கை

(புதுடில்லி)

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டும் என்று இலங்கை தமிழ்த் தலைவர்கள் கூறியுள்ளனர்.

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங் வெளியிட்டுள்ள அறிக்கையையும் அவர்கள் வரவேற்றுள்ள னர்.

தற்போது புதுடில்லியில் உள்ள தமிழ் தேசிய கூட்டணி எம்.பி.யும் வழக்கறிஞருமான என் ஸ்ரீகாந்தா இது குறித்து கூறியதாவது,

இலங்கையில் ஏற்பட்டுள்ள பிரச்சி னைக்கு இராணுவத்தால் தீர்வுகாண முடியாது அரசியல் ரீதியாக பேச்சுவார்த்தை நடத்தப்படுவதன் மூலம்தான் தீர்வுகாண முடியும்.




இலங்கையில் தமிழ் மக்கள் அமைதியுடன் வாழ அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் படக்கூடிய தீர்வை வழங்க இலங்கை அரசு முன்வரவேண்டும்.

இலங்கையில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே சிக்கித் தவிக்கும் ஈழத் தமிழர்களுக்கு இந்தியா மனிதாபிமான அடிப்படையில் உணவு மருந் துப் பொருட்களை வழங்கி உதவ வேண்டும்.

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வெளியிட்டுள்ள அறிக்கையை வரவேற்கிறேன். இது ஒரு நல்ல தொடக்கம் இலங்கை பிரச்சினைக்கு தீர்வுகாண இந்தியா முக்கிய பங்காற்ற வேண்டும் என்றே இலங்கை தமிழர்கள் விரும்புகிறார்கள் என்று அவர் கூறினார்.

இலங்கையில் இரு தரப்பினரும் தொடர்ந்து போரிட்டு கொண்டிருப்பதை நிறுத்திவிட்டு அப்பாவி தமிழர்களின் நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழ்த் தலைவர்களும் தமிழ் மக்களும் பிரச்சினைக்கு தீர்வுகாண தயாராகவே இருக்கிறார்கள் .ஆனால் ராஜபக்ஷ அரசு தமிழ் மக்களுக்கு சிறிதளவு அதிகாரம் கொடுக் கக்கூட விரும்பவில்லை. அங்கு ஆட்சி புரிந்த அரசுகள் இதுவரை தமிழர்களுடன் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ள நடவடிக்கை எடுத்தது இல்லை.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு தேடி நாங்கள் வரவில்லை. வடபகுதியில் வசிக்கும் தமிழர்களை காப்பாற்ற வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை என்றார். இப்பிரச்சினையில் இந்தியா தவிர வேறு எந்த நாட்டிடமும் நாங்கள் உரிமையுடன் உதவி கோர முடியாது என்று சிவாஜிலிங்கம் எம்.பி. கூறியுள்ளார். (ஓ)

# பாகிஸ்தானும் சீனாவும் இலங்கையில் தளம் அமைத்து இராமேஸ்வரத்தை தாக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்

## விஜய டி.ராஜேந்திரர் கேள்வி

(சென்னை)

இலங்கையில் விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டால் எதிர்காலத்தில் பாகிஸ்தானும் சீனாவும் இலங்கையில் தளம் அமைத்து இராமேஸ்வரத்தையே அழிப்பதற்கு முயற்சி மேற்கொள்ள படாது என்பதற்கு உத்தர வாதம் இல்லை என இலட்சியதிராவிட முன் னேற்ற கழகத் தலைவர் விஜய டி.ராஜேந்தர் தெரிவித்தார்.

சீக்கியரின் கண்ணில் இருந்து வருவது கண்ணீராக தெரிகின்றபோது தமிழரின் கண்ணில் இருந்து வருவது மட்டும் சுண்ணம்பு நீர் என்றா இந்தியா நினைத்துக் கொண்டிருக்கின்றது என்றும் அவர்கேள்வி எழுப்பினார்.



இலங் கைத் தமிழர்பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டும் என்றும் யுத்தமும் அதனூடான மனிதப் படுகொலைகளும் தடுத்து நிறுத்தப்படுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரி தென்னிந்தியதமிழ்த் திரையுலகினர் நேற்று முன்தினம் இராமேஸ்வரத்தில் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து பேசுகையிலேயே விஜய டி. ராஜேந்தர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல்லாயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக் காரர்கள் மத்தியில் அவர் தொடர்ந்தும் பேசுகையில், நான் இந்த மேடையில் அரசியல் பேசவில்லை. இலங்கை மண்ணிலே போராடிக் கொண்டிருக்கும் தமிழருக்காக குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். கலைஞர் தலைமையில் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு சிலர் வரவில்லை. அதேபோல் இன்றைய எமது தமிழ்பற்று கொண்ட போராட்டத்திலும் கலந்து கொள்ளவில்லை.

ராஜீவ் காந்தி கொலைக்கு ஒரு தமிழன் காரணம் என்பதற்காக கடந்த 18 வருடங்களாக ஒட்டுமொத்த தமிழினமும் பழிவாங்கப்பட வேண்டுமா எனக் கேட்கிறேன். இந்திரா காந்தியை கொலை செய்த சீக்கிய இனத் தைச் சேர்ந்த மன்மோகன் சிங் பிரதமராக ஆகியிருக்கிறார். அப்படியிருக்கும் போது தமிழர் பிரச்சினை மட்டும் ஏன் தட்டிக்கழிக்கப்படுகின்றது.

சீக்கியரின் கண்ணில் இருந்து வருவது கண்ணீராக தெரிகின்றபோது தமிழரின் கண்ணில் இருந்து வருவது சுண்ணாம்பு நீர் என்றா இந்தியா நினைத்துக் கொண்டிருக்கின்றது. நான் இங்கு மட்டுமல்லக எந்த இடத்திலும் தமிழ் பற்றுடையவன். இலங்கையில் இருப்பது எனது இனம். அந்த இனம் சிங்களவர்களால் படுகொலை செய்யப்படுவதை என் னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இலங்கையில் தெலுங்கு மொழி பேசுபவர்களை அல்லது கர்நாடகம் பேசுபவர்களை சிங்கள இராணுவம் தாக்க முடியுமா? முடியாது. அப்படி நடந்தால் அந்த அரசுகள் சும்மா இருக்காது.

ஆனால் இலங்கையிலே எனது இனம் நமது தமிழினம் சிங்கள அரசாங்கத்தால் இனப்படுகொலைக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறது. அதனைப் பார்த்துக்கொண்டு இந்தியா கவலையில்லாமல் இருக்கின்றது.

இன்று இலங்கையிலே தமிழ் மக்களுக்கு உறங்க இடம் இல்லை, உணவில்லை, சுகாதார வசதியில்லை ,மருந்து இல்லை அனைத்தும் இழந்து அகதிகளாக்கப் பட்டிருக்கிறார்கள். பழ நெடுமாறன் திரட்டிய உணவுப்பொருட்களையும் அந்த மக்களுக்கு கொடுக்க விடாமல் தடுக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா தலையிடாவிட்டால் 40 எம்.பி பதவிகளை துறப்போம் என அதிரடி முடிவெடுத்தமையால் இலங்கைத் தமிழர் வயிற்றில் கலைஞர் பாலை வார்த்திருக்கிறார். ஐ.நா. அனுசரணையில் இன்று அந்த மக்களுக்கு உணவு லொறி அனுப்பப்படுகின்றது என்றால் அது தமிழகத்தின் அழுத்தத்தினாலேயே ஆகும்.

இலங்கையில் விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டால் எதிர்காலத்தில் பாகிஸ்தா னும் சீனாவும் இலங்கையில் தளம் அமைத்து இராமேஸ்வரத்தையே அழிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்படாது என்பதற்கு உத்தர வாதம் இல்லை. அது நடைபெறும் போது தான் இந்தியாவுக்கு வலி தெரியப்போகின்றது என்றார். (ஓ)

# மண்டப முகாமிலுள்ள அகதிகளுக்கு தமிழ்த் திரையுலகினர் புத்தாடை வழங்கினர்

(சென்னை)

மண்டபம் முகாமில் வசிக்கும்3ஆயிரத்து 152அகதிகளுக்கு திரையுலகினர் சார்பில் புத்தாடைகள் வழங்கப்பட்டன. இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதைத் கண்டித்து தமிழ் திரையுலகம் சார்பில் நேற்று முன்தினம் இராமேஸ்வரத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற இயக்குனர்கள் பாரதிராஜா ராம நாராயணன் விஜய டி ராஜேந்தர், தமிழ் நாடு திரைப்பட சங்க மாநிலத் தலைவர் அண்ணாமலை மற்றும் பெப்சி பொதுச்செயலர் உமாசங்கர் நேற்று முன்தினம் காலை 10.35 மணிக்கு மண்டபம் முகாம் அகதிகளுக்கான சப்-கலெக்டர் அலுவலகம் வந்தனர்.

பின் அவர்கள் முகாமில் வசிக்கும்953 குடும்பத்தைச் சேர்ந்த 3ஆயிரத்து 152 பேருக்கு புத்தா டைகள் வழங்கினர். இதில் ராமநாதபும் கலெக் டர் கிர்லோஷ்குமார் மண்டபம் அகதிகளுக்கான சப்.கலெக்டர் அருணாச்சலம் மற்றும் ராமேஸ்வரம் டி.எஸ். பி. கமலா பாய் கலந்து கொண்டனர். தமிழ்த் திரையுலகத்தினர் வருவதை அறிந்த மண்டபம் முகாம் அகதிகள் அங்குள்ள சப்-கலெக்டர் அலுவலகம் முன் குவிந்தனர். அவர்களிடம் டைரக்டர் விஜய டி ராஜேந்தர் பேசுகையில் இலங்கைத் தமிழர்களுக்கும் நமக்கும் உள்ள உறவு தொப் புள்கொடி உறவாகும் . இலங்கையிலிருந்து உடமைகள் இருப்பிடங்களை விட்டு வந்ததை பார்க்கும் போதுபரிதாபமாக உள்ளது.

தமிழக முதல்வர் கருணாநிதி அறிவித்ததைத் தொடர்ந்து எம்.பி.க்கள் ராஜினாமா கடிதம் கொடுத்தனர். இதனால் மத்திய



அரசு பேச்சுவார்த்தை நடத்தியதால் ஐ.நா. சபை நிறுத்தி வைத்திருந்த உணவு மருந்து விநியோகங்கள் மீண்டும் வழங்கப்பட்டு வருகிறது நீங்கள் மிண்டும்நாடுதிரும்ப மன தார வேண்டிக்கொள்கிறேன் என்றர்ர்.

அப்போது விஜய டிராஜேந்தர் கண்லங்கினார். இதைப் பாத்த கலைப்புலி சேகரன், காஜா மைதீன் மற்றும் அகதி பெண்களும் கண்கலங்கினர். டைரக்டர் பாரதிராஜா பேசும் போது நாங்கள் உங்களுக்குக் கொடுக்கும் உதவி யானை பசிக்கு சோளப்பொரி கொடுத்தது போல்தான் நீங்கள் உங்களது நாட்டுக்குச் செல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன் என்றார். (ஓ)

பண்போடு பொருந்தாத அனுதாபம் எல்லாம் மறைமுகமான சுயநலமேயாகும்.

- கோலரிட்ஜ்

வலம்புரி

## எவரையும் சமாளிக்க வேண்டாம் அடிப்படைப் பிரச்சினைக்கு தீர்வே வேண்டும்

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள ஈழத்தமிழர் ஆதரவைத் தொடர்ந்து இந்திய மத்திய அரசு இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டுள்ளது.

என்ன விலை கொடுத்தேனும் யுத்தத்தை நிறுத்துமாறு பிரதமர் மன்மோகன் சிங் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அறிவுரை கூறியுள்ளார்.

எனினும் யுத்தம் நடந்து கொண்டே இருக்கிறது. இவ்வாறு யுத்தம் நடந்து கொண்டிருக்கும் அதே சமயம், இலங்கை அரசின் விசேட குழுவொன்று இந்தியா செல்லவும், இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வருவதற்குமான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இருதரப்பும் மாறிமாறி விளக்கங்கள், வியாக்கியானங்களை கொடுப்பது எதற்காக? இந்தியாவை சமாளிக்கவேண்டுமென இலங்கையும் தமிழகத்தை சமாளிக்கவேண்டுமென இந்திய மத்திய அரசும் நினைக்கின்றன.

ஆக இரண்டு அரசுகளும் யுத்தத்தை நிறுத்துவதற்கான சிந்தனைகளை விடுத்து சமாளிப்பு நாடகத்தையே மீண்டும் அரங்கேற்றுகின்றன.

'மீண்டும் அரங்கேற்றம்' என்றவுடன் அப்படியானால் முன்பும் இதுவா நடந்தது என்ற கேள்வி யாவரிடமும் ஏற்படலாம்.

அவ்வாறான கேள்விக்கான பதில் இலங்கை அரசும் இந்திய மத்திய அரசும் இனப்பிரச்சினையை தீர்க்கவேண்டும் என்ற உள்ளார்ந்த சிந்தனையுடன் செயற்பட்டிருந்தால் இனப்பிரச்சினை என்றோ தீர்த்திருக்கும் அல்லவா?

ஆக இலங்கையில் யுத்தம் உச்சமடையும்போது இரு நாடுகளும் கதைத்துக் கொள்ளும், அதனைத் தொடர்ந்து யுத்தம் மெல்லியதாக தணிந்து கொள்ள தமிழகத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் அமைதி பெறுவர். ஈழத்தமிழரும் இந்தியா தலையிட்டு விட்டது, இனிமேல் யுத்தத்துக்கு இடமேயில்லை என்று அப்பாவித்தனமாக நம்பிக்கொள்வர்.

பேச்சுவார்த்தை என்ற செய்திகளும் இடையிடையே பரவும் -பரப்பப்படும். மீண்டும் பொதுத் தேர்தல் -புதிய அரசு -யுத்தப் பிரகடனம்-அப்பாவி மக்கள் பலி என்ற துயரம் தொடரும் இந்நிலையையே இம்முறையும் காணலாம்.

தமிழக முதல்வர் கருணாநிதியின் கொதிப்பினால் அவரின் ஆதரவுடன் இயங்கும் மத்திய அரசு இலங்கையில் இடம்பெறும் யுத்தத்தை நிறுத்தக் கோருகிறது.

யுத்தத்தை நிறுத்துமாறு இலங்கை அரசுக்கு கூறுவதற்கு கூட தமிழகத்தில் பல நாட்கள் ஆர்ப்பாட்டம்,உண்ணாவிரதம் என்ற அகிம்சைப் போராட்டங்களை செய்யவேண்டியிருந்தது.

இத்தனை செய்த பின்பும் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் உற்சாகம் ஏற்படுவதாகத் தெரியவில்லை. ஏனோதானோ என்றவாறு இலங்கை ஜனாதிபதியுடன் தொலைபேசி உரையாடலை நடத்தியுள்ளார்.

இந்த வேகத்தில் செயற்படும் ஒரு நாட்டினால் அண்டை நாட்டுப் பிரச்சினையை தீர்க்க முடியுமா, என்ன?

ஒரு காலத்தில் இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி அவர்கள் அண்டை நாட்டில் யுத்தம் -பிரச்சினை இருக்கக் கூடாது என எண்ணினார்.

அதற்கான இராஜதந்திர நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்டார். தமிழகத்து மக்கள் என்ன நினைக்கிறார்கள் என எதனையும் அவர் பார்க்கவில்லை.

ஆனால் இன்று இந்திராகாந்தி போன்ற தலைவர்கள் இந்தியாவில் இல்லை. இதனால் சமாளிப்பு நாடகமே நடந்தேறுகின்றது.

அதற்கான பூர்வாக ஏற்பாடுகளை இரண்டு நாட்டு அரசுகளும் செய்து வருகின்றன. எதுவாயினும் இலங்கையில் யுத்தம் இடம்பெறக் கூடாது என நினைக்கும் பொறுப்பு இலங்கை அரசினுடையதாகும்.

இலங்கை எமது நாடு. இந்த நாட்டை சமாதான நாடாக ஆக்குவோம் என்ற சிந்தனையுடன் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படவேண்டும். இதை விடுத்து உலக நாடுகளிடம் இருந்து ஆயுதங்களையும் இராணுவப் பயிற்சிகளையும் பெற்று சொந்த நாட்டு மக்களுடன் போர் தொடுக்கும் செயல் தேவையற்றதாகும்.

எனவே இந்தியாவை சமாளிப்பது அல்லது ஐ.நாவை சமாளிப்பது என்ற குறுகிய மனநிலையுடன் செயற்படாமல் எல்லா இனங்களும் எல்லா உரிமைகளையும் பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில் சமாதானத்தை ஏற்படுத்தவும், ஒவ்வொரு இனத்தவரும் மதத்தவரும் தத்தம் உரிமைகளை -அதிகாரங்களை தாமே பாதுகாத்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றுக்கொள்ளவும் கூடியதான செயற்பாடுகளை உருவாக்குவதே சிறந்த வழியாகும்.

# இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை ஏற்க வேண்டும்

## இனவாத கட்சிகள் ஓரங்கட்டப்படவேண்டும் என்கிறது இடதுசாரி முன்னணி

(கொழும்பு)

தேசிய இனப் பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டைஇலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும் இல்லையேல் அதன் விளைவுகள் இரண்டு நாடுகளுக்குமே மிகவும் பாரதூரமானதாக அமைந்து விடும்மென இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

நியாயமான அணுகுமுறைக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் இனவாதக் கட்சிகளான ஜே.வி.பி மற்றும்ஜாதிக ஹெல உறுமய ஆகியன இந்த நாட்டை விட்டே ஓரங்கட்டப்பட வேண்டுமெனவும் அவர் கூறினார்.

இலங்கை பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் தலையீடுகள் குறித்து கேட்டபோதே கலாநிதி விக்கரமபாகு கருணாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்துார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில் இலங்கையை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்ற தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வுகள் என்ற பெயரில் காலங்கள் கடத்தப்படுகின்றனவே தவிர நியாயமான தீர்வுகள் எதையும் இன்றுவரை முன்வைக்க முடியாதிருப்பது விரும்பத்தகாத விடயமாகும்.

யுத்தம் என்ற பெயரில் அழிவுகள் மிஞ்சுமே தவிர சமாதானமும் சக வாழ்வும் கனவாகும். யுத்தம் தற்போது உக்கிர மடைந்திருக்கும் நிலையில் தமிழகத்தின் எழுச்சிகள் மத்திய அரசாங்கத்தை தர்மசங்கடத்தில் தள்ளிஉள்ளது.இந் நிலையில் மத்திய அரசாங்கமும் இலங்கை விடயத்தில் தலையிட்டுருக்கின்றது. இந்தியப் பிரதமர் தமது ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ளும் வகையிலேயே இலங்கை மீது சில அழுத்தங்களைக் கொடுத்துவருகிறார்.

உண்மையில் மன்மோகன் சிங் அரசாங்கம் ஆட்சிக் கவிழ்த்து விடுமென்ற அச்சத்தினாலேயே இதில் தலையிட்டிருக்கின்றது. அவ்வாறு உறுதியான பிடியொன்று தமிழ்நாட்டில் இருக்கின்றது.

ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின் அரசாங்கம் பல விடயங்களில் இந்தியாவையே நம்பியிருக்கின்றது: அத்துடன் இந்தியாவின் கைப் பொம்மையாகவும் ஜனாதி பதி மஹிந்த செயற்பட்டு வருகிறார்.கருணா எம்பியானதும் பிள் ளையான் முதலமைச்சரானதும் கூட இந்தியாவின் அழுத் தங்களிலினாலேயே ஆகும் எனவே தற்போது இலங்கை விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும் இந்தியா இலங்கை விடயத்தில தலையிடாது தமிழ் நாட்டின் எழுச்சியை உதா சீனப்படுத்தினால் அது மத்தியஅரசாங்கத்தை ஆட்டம் காணச் செய்து விடும் .

அதேவேளை இந்தியாவின் நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் அலட்சியப்படுத்தினால் கூட்டமைப்பு அரசாங்கதத்துக்கான சலுகைகளை இழக்க நேரிடும் எனவே தேசிய இனப் பிரச்சினை விடயத்தில் இலங்கை அரசாங்கம் சாதகமான தீர்மானங்களை எடுக்காது விட்டால் அது இரு நாடுகளுக்குமே பாரிய சிக்கல்களை தோற்றுவிக்கும் . இதனை இந்தியா ஒரு போதும் விரும்பப்போவதில்லை.

எனவே தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்பதே பல்வேறு தரப்புக்களினதும் அபிலாசையாகும்.

இதனை நிறைவேற்றுவதற்கு ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய இனவாதக் கட்சிகள் முட்டுக்கட்டையாக இருக்கின்றன. இந்த முட்டுக்கட்டைகள் முதலில் அகற்றப்பட வேண்டும். தேசிய இனப் பிரச்சினைக்காக தீர்வுவிடயத்தில் இனவாதக்கட்சிகளின் ஆலோசனைகள் நிராகரிக்கப்பட வேண்டும் என்றார். (ஓ)

# அரசியலமைப்பிற்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்த இணக்கம்

(கொழும்பு)

அரசியலமைப்பு சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்கட்சி தலைவர் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரே இடம் பெறவிருப்பதாக நட்பகரமாக தெரிய வருகின்றது.

மேற்படி விடயம் தொடர்பில் பிரதமர் ரட்ண சிறி விக்ரம நாயக்கவிற்கும் இடையில் கடந்தவாரம் இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் போது அரசியலமைப்பு சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதியுடன் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டது.

உயர் நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைய பிரதமரும் எதிர்கட்சி தலைவரும் கடந்த 15 ஆம் திகதி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதுடன் தங்களால் சிபாரிசு செய்யப்பட்டுள்ள பெயர்கள் தொடர்பிலும் இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர். அத்துடன் எட்டப்பட்ட முடிவு தொடர்பில் ஜனாதிபதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அரசியலமைப்பிற்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பில் ஏற்பட்டிருந்த இழுபறி நிலைக்கு முடிவுகாண்பதற்காக விரைவில் ஜனாதிபதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்ட போதிலும் அந்தச் சந்திப்பு 2009 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத்திட்டம் செப்டெம்பர் மாதம் 6 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரே இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட அன்றைய தினமே பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் மூவரும் சந்தித்து கலந்துரையாட விருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. அரசியலமைப்பு சபைக்கு பிரதமர், எதிர்க்கட்சி தலைவரினால் ஐந்து உறுப்பினர்களின் பெயரும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சிறுபான்மை கட்சிகளும் சார்பில் தலா ஒரு உறுப்பினரின் பெயரும் சிபார்சு செய்யப்படும்.

எனினும் அரசியல் அமைப்பு' சபைக்கான உறுப்பினர்கள் ஜனாதிபதியினாலேயே தெரிவு செய்யப்படுவார்கள்.(ஓ)

# இலங்கையின் இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலமே தீர்க்க முடியும்

## முன்னாள் தென்னாபிரிக்க ஜனாதிபதி


(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்க்க முடியும் என சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்றவரும் தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியுமான எவ்.டபிள்யூ.டி கிளார்க் தெரிவித்துள்ளார். இலங்கை, கென்யா , சூடான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் இன கலாசார மற்றும் சமய பிரச்சினைகள் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்க்கப்படவேண்டும் எனவும் முன்னர் முரண்பட்டுக்கொண்டிருந்த இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையே தீர்வென அவர்கள் உணர்ந்துகொண்டதார்கவும் அவர் கூறினார்.

ஐக்கிய அமெரிக்கா மற்றும் உலகத்தின் அதிகாரம் கொண்ட நாடுகள் இணைந்து இந்த நாடுகளில் சமாதானத்தை நிலை நாட்ட வேண்டும் இல்லாவிட்டால் அது ஆபத்தாக மாறி விடும் என அலாமா பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் முன்னாள் தென்னாபிரிக்க ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தூர நாடுகளில் காணப்படும் பிரச்சினைகளை எவரும் புறந்தள்ளிவிட முடியாது பிரச்சினைகளும் ஸ்திரமற்ற தன்மையும் சமூகங்களால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு சர்வதேசரீதியில் நல்ல சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். உலகத்திலேயே மிகவும் பலம் வாய்ந்த நாடாக அமெரிக்கா இருப்பது மிகவும் இலகுவானதல்ல எனக் குறிப்பிட்ட அவர் 3ஆம் உலக நாடுகளின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் சமாதானத்தைப் பேணுவது பலம் வாய்ந்த நாடுகளின் கடமை எனக் கூறினார். இராணுவ நடவடிக்கைகள் மூலம் இறுதித்தீர்வை கண்டுவிட முடியாது என சுட்டிக்காட்டிய முன்னாள் தென்னாபிரிக்க ஜனாதிபதி 1970ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் தென்னாபிரிக்கா இவ்வாறான பிரச்சினையை எதிர்கொண்டதாக தெரிவித்தார். (ஓ)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி எண்ணத்தின் ஆதிக்கம்



ஒளியின் அலைகள் ஒரு குறிப்பிட்ட இலக்கை அடையுமுன் இலட்சோப லட்சம் ஆண்டுகள் பயணம் செய்யலாம். அது போலவே எண்ண அலைகளும் தங்களுக்கு ஏற்றவிதத்தில் அதிர்கின்ற ஒரு பொருளைச் சென்றடைய நூற்றுக் கணக்கான ஆண்டுகள் பயணம் செய்ய நேரலாம். எனவே இந்த வானவெளி அத்தகைய நல்ல மற்றும் தீய அலைகளால் நிரம்பி இருப்பதற்கான எல்லா வாய்ப்புகளும் உள்ளன. ஒவ்வொரு மூளையிலிருந்தும் வெளிக் கிளம்புகின்ற ஒவ்வோர் எண்ணமும் அதை ஏற்றுக் கொள் வதற்குப் பொருத்தமான பொருளை அடையும் வரையில் அதிர்ந்து கொண்டேயிருக்கின்றன என்று சொல்லலாம்.

அவற்றை ஏற்றுக் கொள்வதற்குத் தகுதியாக இருக்கின்ற மனம் உடனடியாக ஏற்றுக் கொள்கிறது. ஒருவன் தீய செயல்களைச் செய்யும் போது அவன் தன் மனத்தை ஒரு குறிப்பிட்ட அதிர்வு நிலைக்குக் கொண்டுவருகிறான். அப்போது, அதே அதிர்வு நிலையில் வானவெளியில் மிதந்து கொண்டிருப்பதாகச் சொல்லப் படுகின்ற எண்ண அலைகள் எல்லாம் அவனது மனத்தில் நுழைய முயல்கின்றன. இதனால் பொதுவாக, தீமை செய்பவன் மேலும் மேலும் தீமை செய்து கொண்டே இருக்கின்றான்; அவனது செயல் தீவிரமாகிறது. நன்மை செய்பவனின் விஷயமும் இது தான். அவன் வானவெளியில் உள்ள நல்ல அலைகளுக்காகத் தன்னைத் திறந்துவைக்கிறான். அவனது நற்செயல்களும் உறுதி பெறுகின்றன.

# நிதி நெருக்கடிகள் குறித்து ஆராய உலகளாவிய ரீதியில் உச்சி மாநாடு

## அமெரிக்காவின் அனுசரணையில் முதலாவது மாநாடு



(வாஷிங்டன்)

உலகளாவிய நிதி நெருக்கடிகள் தொடர்பில் கலந்துரையாடும் முகமாக உச்சிமாநாட்டு தொடரொன்றை நடத்துவ தற்கான திட்டத்தை அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைவர்கள் முன் வைத்துள்ளனர்.

இதில் முதலாவது உச்சிமாநாடானது அமெரிக்காவின் அனுசரணையில் நடைபெறவுள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ . புஷ் அறிவிப்புச் செய்துள்ளார். பிரான்ஸ் ஜனாதிபதி நிகொலஸ் சார்க்கோஸி மற்றும் ஐரோப்பிய ஆணையக தலைவர் ஜோஸ் மானுவேல் பார்ரோஸோ ஆகியோருடன் மேரிலாண்டிலுள்ள காம்ப் டேவிட்டில் பேச்சுவார்த்தை நடத்தும் முன் புஷ் ஆற்றிய உரையில், நாம் அனைவரும் இணைந்து செயற்படுவது அவசியமாகும் என வலியுறுத்தினார்.

இந்த முதலாவது உச்சி மாநாடானது எப்போது நடைபெறும் என திகதி குறிப்பிடப்படவில்லை என்ற போதும், நவம்பரில் இடம்பெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு பின் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.


உலக நிதியியல் முறைமைகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்கு வழியமைக்கும் வகையிலான கூட்டங்களை நடத்த ஐரோப்பிய ஆணையகம் எதிர்பார்த்துள்ளது.

காம்ப் டேவிட்டிற்கு வருகை தரும் முன் சார்க்கோஸி ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டியில், 20 ஆம் நூற்றாண்டு பொருளாதார சாதனங்களுடன் 21 ஆம் நூற்றாண்டு பொருளாதாரத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாது என எச்சரிக்கை விடுத்தார்.

மேற்படி உச்சிமாநாடானது உலகளாவிய ரீதியிலான அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை உள்ளடக்கி நடைபெறும் என புஷ் தெரிவித்தார்.

இதன்போது சார்க்கோஸி, ஆசிய நாடுகளை இந்த உச்சிமாநாட்டில் உள்வாங்குவதன் அவசியம் குறித்து வலியுறுத்தினார்.

இது உலகளாவிய நெருக்கடியாகும். அதனால் இதற்கு உலகளாவிய தீர்வொன்று எட்டப்படுவது அவசியமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ)



இந்தியாவின் இலட்சிய பயணத்தை நிறைவேற்றும் சந்திராயன்-1 விண் கலத்தை சுமந்து செல்லவிருக்கும் பிஎஸ். எல். வி. ராக்கெட்

# கார் ஓட்டும் போது பேசுவதை தடுக்கும் புதிய செல்போன்



கார் ஓட்டும் போது செல்போனில் பேசுவதால் கவனம் திசைதிரும்புவதுதான் பெரும்பாலான விபத்துக்களுக்கு காரணம். காரை ஸ்டாட் செய்வதற்கு முன் செல்போனை அணைத்து விட மறந்து விடுகிறார்கள். கார் ஓட்டும் போது செல்போன் ஒலித்தால் அதை எடுக்கக் கூடாது என்ற கட்டுப்பாட்டையும் மறந்து விடுகிறார்கள்.

இதற்காகவே கனடா நாட்டு நிறுவனம் புதிய சொப்ட்வெயாரை உருவாக்கி உள்ளது. இந்த சொப்ட்வெயார் உள்ள செல் போன் உரிமையாளர்கள் கார் ஓட்டும் போதோ மோட்டார் சைக்கிள் ஓட்டும் போதோ செல்போன் ஒலிக்காது கார் ஓட்டிக் கொண்டிருக்கிறார். தொல்லை கொடுக்காதீர்கள் என்று அழைப்பவர்கள். எச்சரித்து இணைப்பை துண்டித்து விடும் டிரைவர் ஓட்டுவதை நிறுத்தினால் மட்டுமே மீண்டும் நெட்வோர்க் கிடைக்கும். மிக அவசர தேவை என்றால் மட்டும் அவ சர அழைப்பு என்றுஉணர்ந்து வொய்ஸ் மெயில் வசதியும் இதில் உள்ளது. எப்படி இருந்தாலும் டிரைவர் ஓட்டு வதை நிறுத்தியாக வேண்டும் அல்லது பயணியிடம் செல்போனை கொடுக்கவேண்டும் டிரைவருக்கு மட்டும் தான் இந்த புதிய டெக்னிக் வாகனத்தில் பயணம் செய்யும் பயணிகளுக்கு இல்லை. (ஓ)

# ஆப்கானிஸ்தானில் பயணிகள் பஸ்ஸை சுற்றி வளைத்து தீவிரவாதிகள் அட்டகாசம்

## 30 பேர் வெட்டிக்கொலை

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க படைகளுக்கு எதிராகவும், அரசுக்கு எதிராகவும் தலிபான் தீவிர வாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

தீவிரவாதிகளின் முகாம்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. தீவிரவாதிகள் இப்போது நாட்டின் பல்வேறு நகரங்களில் தங்கள் கைவரிசையை காட்டி வருகிறார்கள்.

கந்தகார் அருகே பயணிகள் மற்றும் இராணுவத்தினரை ஏற்றிக் கொண்டு ஒரு பஸ் சென்று கொண்டிருந்தது. அந்த பஸ்ஸில் 50-க்கும் மேற்பட்டவர்கள் இருந்தனர்.

மேலான்டு பகுதியில் அந்த பஸ் சென்று கொண்டிருந்த போது தலிபான் தீவிர வாதிகள் அந்த பஸ்ஸை சுற்றி வளைத்தனர். பஸ் நின்றதும் தீவிரவாதிகள் துப்பாக்கி மற்றும் வெடிகுண்டுகள், வாள் ஆகியவற்றுடன் பஸ்ஸுக்குள் சென்றனர்.

பஸ்ஸுக்குள் சாதாரண உடையில் இருந்த இராணுவ வீரர்களை அடையாளம் கண்டு அவர்களை வெளியே இழுத்து வந்தனர். அவர்களை தீவிரவாதிகள் வாளால் வெட்டி கொன்றனர்.

மொத்தம் 30 பேரை தீவிர வாதிகள் வெட்டி கொன்றனர். இவர்களில் 27 பேர் இராணுவத்தினர்.

தீவிரவாதிகளை எதிர்த்த 3 பயணிகளும் வெட்டி கொல்லப் பட்டனர். பெண்கள் மற்றும் குழந்தைகள் மட்டும் தப்பினர்.

தீவிரவாதிகளின் தீடீர் தாக்குதலுக்கு ஆப்கானிஸ்தானில் இந்த ஆண்டு மட்டும் 1300 பேர் பலியாகி இருக்கிறார்கள். (ஓ)

BOC ATM

யாழ். குடாநாட்டில் இலங்கை வங்கியின் புதியதோர் பரிணாம வளர்ச்சி

இதோ! தேசத்தின் வங்கியாம்
இலங்கை வங்கி
ATM வசதியை உங்களுக்கு
அர்ப்பணமாக்குகின்றது

தன்னியக்க கொடுக்கல் வாங்கல் இயந்திரம் (ATM) மூலம் பணம் பெறும் வசதியை அறிமுகமாக்குகிறோம்

- இரு நாட்களில் 4 கிளைகளில் ஆரம்பம்
- எமது வங்கிச்சேவை உங்கள் விரல் நுனிகளில்
- நினைத்த நொடியில் பணம்
- நீண்ட வரிசை தேவையில்லை
- 24 மணி நேரமும் .தேவைக்கேற்ப பணம் பெறும் வசதி
- உங்கள் கணக்கு நிலுவையை அறியவும் மற்றும் பல பரிமாற்றங்களை செய்யவும் வசதி.



| கிளை | காலம் | நேரம் |
|---|---|---|
| 1.மானிப்பாய் | 22.10.2008(புதன்) | 10.00(மு.ப) |
| 2.சுன்னாகம் | 22.10.2008(புதன்) | 12.00(பி.ப) |
| 3.பருத்தித்துறை | 23.10.2008(வியாழன்) | 9.00(மு.ப) |
| 4.நெல்லியடி | 23.10.2008வியாழன்) | 11.00(மு.ப) |


மேற்படி சேவை இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் உயர் திரு.B.A.அருமைநாயகம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

செயற்பாட்டு முகாமையாளர்,
உதவிப் பொது முகாமையாளர் காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

(சி/1699)

## ஹர்பஜன், இஷாந்தின் துல்லியமான பந்துவீச்சில்

# ஆஸி.யின் துடுப்பாட்ட வரிசை சரிந்தது; இந்திய அணியின் வெற்றி பிரகாசமானது




(மொகாலி)

ஹர்பஜன், இஷாந்த் சர்மாவின் துல்லியமான பந்து வீச்சில் அவுஸ்திரேலிய அணியின் முன்னணித் துடுப்பாட்ட வரிசை சரிய அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 141 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 5 விக்கெட்டுக்களை இழந்துள்ளது.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 314 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தி அவுஸ்திரேலிய அணிக்கு வெற்றி இலக்காக 516 ஓட்டங்களை நிர்ணயித்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடு கின்றது.



இதில் முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்து தொடர் சமனிலையானது. இந்நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த வெள்ளிக்கிழமை மொகாலியில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுபெடுத்தாடிய இந்திய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களைமிழந்து 469 ஓட்டங்களை எடுத்தது.

இதில் கங்குலி 102 ஓட்டங்களையும் தோனி 92 ஓட்டங்களையும் டெண்டுல்கர் 88, காம்பீர் 67 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஷைட்டில், ஜோன்ஸன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் வைற் 2 விக்கெட்டுக்களையும் பிரெட் லீ ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி சகல விக்கெட்டுக்களையுமிழந்து 268 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

இதில் வோட்டின் 78 ஓட்டங்களையும் ஹசி 54 ஓட்டங்களையும் மற்றும் பிரெட் லீ 35, ஹட்ரிச் 33 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அறிமுக வீரர் அமித் மிஸ்ரா 5 விக்கெட்டுக்களையும் இஷாந்த் ஷர்மா, ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் மற்றும் சகீர்கான் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 201 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலிருந்த இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிபில் விக்கெட் இழப்பின்றி 100 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி வீரேந்திர சேவாக், காம்பீரின் அதிரடியான ஆட்டத்தில் ஓட்டங்களைக் குவித்தது.

சிறப்பாக ஆடிய காம்பீரும் தனது அரை சதத்தை பூர்த்தி செய்தார்.

மறு முனையில் தனது 30 ஆவது பிறந்த நாளில் சதம் பெறுவார் என எதிர்பார்த்த வீரேந்திர சேவாக் 90 ஓட்டங்களை எடுத்த போது ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 182 ஓட்டங்களை சேர்த்து இந்திய அணிக்கு பலம் சேர்த்தது. தொடர்ந்து இரண்டாவது விக்கெட்டுக்காக காம்பீருடன் அணித் தலைவர் தோனி ஜோடி சேர்ந்தார்.

இந்த ஜோடியும் அதிரடியாக ஆட இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 400 ஓட்டங்களுக்குமேல் முன்னிலையடைந்தது.

ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடிய காம்பீர் 136 ஆவது பந்தில் தனது இரண்டாவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்து அசத்தினார்.

எனினும் காம்பீர் 138 பந்துகளில் (7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 104 ஓட்டங்களை எடுத்தபோது ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய கங்குலியும் சிறப்பாக ஆடி ஓட்டங்களை எடுத்தார்.

மறு முனையில் அதிரடியாக ஆடிய அணித்தலைவர் தோனி 61 ஆவது பந்தில் அரைச்சதத்தைப் பூர்த்திசெய்தார். எனினும் மறுமுனையில் கங்குலி 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய டெண்டுல்கர், தோனியுடன் இணைந்து சிறப்பாக ஆட இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 314 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் இந்திய அணி ஆட்டத்தை இடைநிறுத்தி அவுஸ்திரேலிய அணிக்கு வெற்றி இலக்காக 516 ஓட்டங்களை நிர்ணயித்தது.

இதில் தோனி 68 ஓட்டங்களுடனும் டெண்டுல்கர் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்து வீச்சில் பிரெட்லீ, ஷைட்டில் மற்றும் வைற் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 516 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு ஆரம்ப ஜோடியான ஹைடன், ஹட்ரிச் இணைந்து சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர்.


எனினும் அவுஸ்திரேலிய அணி 49 ஓட்டங்களை எடுத்தபோது ஹைடன் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.


அடுத்து அணிதலைவர் பொன்டிங் களமிறங்க மறுமுனையில் ஹட்டிச் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய நம்பிக்கை நட்சத்திரம் ஹசி ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

அடுத்து களமிறங்கிய கிளார்க் நிதானமாக ஆட மறுமுனையில் பொன்டிங் 2 ஓட்டங்களை மாத்திரமெடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த வோட்டினும் 2 ஓட்டத்துடன் ஆட்டமிழந்து வெளியேற அவுஸ்திரேலிய அணி 9 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்





டுக்களையிழந்து 58 ஓட்டங்களை மாத்திரமெடுத்து தடுமாறியது.

எனினும் தொடர்ந்து மைக்கெல் கிளார்க்குடன் இணைந்த ஹடின் பொறுப்புடன் ஆடி ஓட்டங்களை எடுத்தார்.

இந்த ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் சரிவிலிருந்து மீண்ட அவுஸ்திரேலிய அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிபில் 5 விக்கெடுக்களை இழந்து 141 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் மைக்கெல் கிளார்க் 40 ஓட்டங்கள்ளுடனும் ஹடின் 37 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.

பந்து வீச்சில் ஹர்பஜன் சிங் 3 விக்கெட்டுக்களையும் இஷாந்த் சர்மா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்.

ஐந்தாவதும் இறுதி நாளுமான இன்று 5 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள அவுஸ்திரேலிய அணி வெற்றி பெறுவதற்கு மேலதிகமாக 375 ஓட்டங்களை பெறவேண்டும். (5)

# நியூசிலாந்து வெற்றிக்கு போராட்டம்

(சிற்றக்கொங்)

ரெட்மோன்ட், ரீடரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் நியூசிலாந்து அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்ட நேர முடிபில் இரண்டாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களை எடுத்தது.

பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி மூன்று ஒருநாள் போட்டி, 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் ஒருநாள் தொடரை நியூசிலாந்து அணி 2:1 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் கடந்த வெள்ளிக்கிழமை சிற்றக்கொங்கில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 245 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 171 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்நிலையில் முதலாவது இன்னிங்ஸில் 74 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் 8 விக்கெட்டுக்களை இழந்து 184 ஓட்டங்களை எடுத்தது.

நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 242 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம் நியூசிலாந்து அணிக்கு 317 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதில் சகீப் அல் ஹசன் 71 ஓட்டங்களையும் மோட்டாஷா 44 ஓட்டங்களையும் ரகீம் 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் விக்டோறி 4 விக்கெட்டுக்களையும் ஓபிறின், பட்டீல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் மில்ஸ் மற்றும் ரெட்மோன்ட் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 317 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் நியூசிலாந்து அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிபில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம்இழந்து 145 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் ஆட்டமிழக்காமல் ரெட்மோன்ட் 62 ஓட்டங்களையும் ரீடர் 38,ஹவ் 36 ஓட்டங்க



ளையும் எடுத்தனர்.5ஆவதும் இறுதி நாளுமான இன்று 8 விக்கெட்டுக்கள் கைவசம் உள்ள நிலையில் நியூசிலாந்து அணி வெற்றி பெறுவதற்கு மேலதிகமாக 172 ஓட்டங்களை எடுத்தாக வேண்டும்.

(5)

# மட்டக்களப்பில் ஹர்த்தால்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தமிழ்ப் பிரதேசங்களில் நேற்றுக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. ஹர்த்தால் காரணமாக அப் பிரதேசங்களின் வழமை நிலைமை பாதிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் மட்டக்களப்பு நகரில் பொலிஸாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு விடுவிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட கடைச் சிப்பந்திகள் இருவர் சடலமாக கண்டு பிடிக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டிக்கும் வகையிலும் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதியிடம் வலியுறுத்தும் வகையிலும் கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் என குறிப் பிடப்பட்டிருந்தவர்கள் மூலம் இந்தக் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஹர்த்தால் காரணமாகப் பாடசாலைகள், அரசாங்க, தனியார் காரியாலங்கள், வங்கிகள் மற்றும் நீதிமன்றங்கள் எதுவும் இயங்கவில்லை.

வியாபார நிலையங்கள் மூடப்பட்டிருந்த தோடு போக்குவரத்துச் சேவைகளும் தடைப் பட்டிருந்தது. (சு)

## இலங்கையில்...

அமைச்சர் அனடொலி செர்டியு கோவ், கோதபாய ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுத்திருந் தார்.

இந்த அழைப்பையேற்று ரஷ்யா சென்றிருக்கும் கோதபாய ராஜபக்ஷ, ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் மற்றும் அமைச்சின் அதிகாரிகளைச் சந்தித்து பல்வேறு விடயங்கள் பற்றிக் கலந்துரையாடியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

செச்னிய பயங்கரவாதிகளுக்கு எதிராக ரஷ்யா போரிட்டதைப் போன்று இலங்கை தற்பொழுது பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடி வருவதாக ரஷ்ய அரசாங்கத் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிராக இலங்கை முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைக்குத் தேவையான இராணுவத் தொழில்நுட்ப உதவிகளை வழங்கத் தயாரெனவும் ரஷ்ய அரசாங்கம் உறுதிமொழி வழங்கியுள்ளது. (சு-5)

## மக்களின்...

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜெயவர்த்தன மற்றும் ரணசிங்க பிரேமதாச போன்றோர் யுத்த நடவடிக்கைகளுடன் நாட்டையும் அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் சென்றதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய தொழிலாளர் சங்க கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஆட்சிக்கு வந்த காலம் முதல் எரிபொருளை மத்திய கிழக்கு நாடுகளிடமிருந்து குறைந்த விலைக்குப் பெற்றுக் கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் அரசாங்கம் நுகர்வோருக்கு மிகவும் அதிக விலையில் எரிபொருளை விற்பனை செய்து வருவதாக அவர் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ளும் நோக்கில் உலகின் மிகப் பெரிய அமைச்சரவைகளில் ஒன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கவலையின்றி பேணி வருவதாக ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியுள்ளார். (சு-3,5)

## தமிழகக் கட்சிகள் எடுத்த...

பாதுகாக்க வலியுறுத்தி தமிழ்த் திரையுலகத்தினர் பல்லாயிரக் கணக்கில் திரண்டு நேற்று முன்தினம் இராமேஸ்வரத்தில் பேரணியையும் பொதுக் கூட்டத்தையும் நடாத்தியதைப் பாராட்டியுள்ளார்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வே என்ற பாரதியின் பாடல் வரிகளைச் சுட்டிக் காட்டி இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அனைத்துத் தமிழர்களும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்று முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஈழத் தமிழர்களைப் பாதுகாப்பதற்காக 1987 ஆம் ஆண்டிலிருந்து தி.மு.க. மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளை அந்தக் கடிதத்தில் முதலமைச்சர் கருணாநிதி விரிவாகப் பட்டியலிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு உதவி செய்வதற்காக 1991 ஆம் ஆண்டு தி.மு.க. அரசு கலைக்கப்பட்டதாகவும் கருணாநிதி அதில் தெரிவித்துள்ளார்.

தற்போது அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவும் வேறு சிலரும் தமிழகத்திலே ஆட்சியிலிருந்து ஏன் விலகக் கூடாது? என்று கேட்பதைச் சுட்டிக்காட்டியுள்ள கருணாநிதி, 1998 ஆம் ஆண்டு அ.தி.மு.க. சார்பில் பிரதமரிடம் ஜெயலலிதா உள்ளிட்ட கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கையெழுத்திட்டு மனு ஒன்றை அளித்ததாகவும் அதில் இலங்கைத் தமிழர்களின் தாயகமாக வடக்குப் பகுதியையும் கிழக்குப் பகுதியையும் இணைக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தான் எழுதிக் கொடுத்தார்களே தவிர அப்படிச் செய்யத் தவறினால் ஆட்சியில் இருந்து விலகிக் கொள்வோம் என்று எழுதிக் கொடுக்கவில்லை என்று கூறியுள்ளார்.

அப்போது இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக மத்திய அரசுக்கு அளித்த ஆதரவை விலக்கிக் கொண்டு முன் உதாரணம் படைக்காத ஜெயலலிதா இப்போது தி.மு.க.மட்டும் பதவியிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்று கேட்பதில் என்ன நியாயம் உள்ளது? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நாம் அனுப்பி தீர்மானங்களை மிகவும் அனுதாபத்தோடு ஏற்றுக் கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாகச் செய்திகள் வருவது நமக்கு ஆறுதலைத் தருகின்றது.

இலங்கை அதிபருடன் பிரதமர் மன்மோகன் சிங் தொலைபேசியில் பேசியுள்ளார். நிலைமையை நேரில் ஆய்வு செய்ய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கைக்கு நேரில் செல்ல இருக்கின்றார்.

பிரதமரின் பேச்சின் விளைவாக அவர் பேசிய அன்றைய தினமே 2 இலட்சத்து 30 ஆயிரம் தமிழர்களுக்கு ஐ.நா. அனுப்பிய உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

எனவே நம்முடைய முயற்சி வீண்போகவில்லை என்பது ஆறுதல் தருகின்றது என்றும் கருணாநிதி தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

இன்று நடைபெற்றவுள்ள மனிதச் சங்கிலியில் பங்கேற்க தி.மு.கவினர் அணிதிரள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டிருக்கின்றார். (சு-5)

## புறக்...

வில்லை என பொலிஸார் கூறினர்.

இந்த சம்பவத்தை அடுத்து புறக்கோட்டை பேருந்து நிலையத்திற்கு பாதுகாப்பு தீவிரப் படுத்தப்பட்டிருந்தது.

இதேவேளை குண்டுவெடிப்புச் சம்பவத்தையடுத்து தரிந்து நின்ற பேருந்துகள் அனைத்தும் விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-5)

## கொழும்பில்...

நாடாளுமன்றம் இன்று கூடவுள்ளமையினால் பிரதமர், மூத்த அமைச்சர்கள் ஆகியோரின் பாதுகாப்பை முன்னிட்டும் அவர்களின் போக்குவரத்துக்கு வசதியாகவும் வீதிகளை குறித்த நேரத்திற்கு மூட தீர்மானித்ததாகப் பொலிஸ் திணைக்களம் தெரிவித்தது.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மீதான தாக்குதலையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-5)

## 6 முனைகளில் படையினர் முன்னகர்வு...

நாச்சிக்குடா தொடக்கம் அக்கராயன் வரையிலான பகுதிகளில் படையினர் மேற்கொண்ட 6 முனை முன்னகர்வுகளுக்கு எதிரான உக்கிரமான தாக்குதலையடுத்துப் படையினரின் நகர்வுகள் முடங்கப்பட்டுள்ளதாகவும் இதில் படையினருக்குப் பாரிய அழிவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் நேற்றுத் திங்கட்கிழமை காலை வரை படையினரின் 6 முனை முன்னகர்வுகளுக்கு எதிராக விடுதலைப்புலிகள் உக்கிர தாக்குதலை நடத்தியதாகப் புலிகள் நேற்று மாலை விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

வான்படையின் எம்.ஐ.-24 ரக உலங்கு வானூர்த்திகள், கிபீர், மிக்-27 ரகவானூர்திகள், வெடிகணை, ஆட்லறி எறிகணை, இலகு மற்றும் கனரக ஆயுதங்களின் செறிவான சூட்டாதரவுடன் படையினர் முன்னகர்வுகளை மேற்கொண்டனர்.

இதற்கு எதிராக விடுதலைப்புலிகள் கண்ணிவெடிகள், பொறிவெடி வயல்களை உருவாக்கி கொலை வலயங்களுக்குள் அவர்களை இழுத்து பெருந்தொகையில் அழிவுகளை ஏற்படுத்தும் நடவடிக்கையில் பெரு வெற்றி கண்டுள்ளதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் படையினருக்குப் பாரிய இழப்புகள் ஏற்பட்டவண்ணம் உள்ளதாகவும் தொடர்ந்து மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் நேற்றுக் காலை வரை இடம்பெற்ற மோதல்களில் 12 பேர் வீரச்சாவடைந்துள்ளதாகவும் புலிகளின் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் தொடர்ச்சியாக நடைபெற்ற மோதல்களைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டம் வன்னேரிக்குளத்தை இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

பிரிகேடியர் ஷவேோன்டர தலைமையிலான இராணுவத்தின் 58-வது படைப் பிரிவு நேற்று முன்தினம் மாலை விடுதலைப்புலிகளின் முக்கிய இடமாக விளங்கிய வன்னேரிக் குளத்தைக் கைப்பற்றியுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சின் இணையத் தளத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அக்கராயன்குளத்திற்கு மேற்குப் பகுதியிலுள்ள பண்டிவெட்டிக்குளம் பகுதியில் விடுதலைப்புலிகள் அமைத்திருந்த 10 கிலோமீற்றர் நீளமான அகழியை இராணுவத்தினர் கைப்பற்றியிருப்பதாகவும் அக்கராயன்குளம்-நாச்சிக்குடா வீதியில் அமைந்திருக்கும் வன்னேரிக்குளத்தின் எஞ்சியுள்ள பகுதியைக் கைப்பற்றும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்னேரிக்குளம் வடக்கு- கிழக்குப் பகுதிகள் தொடர்ந்தும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதுடன் அடம்பன்மோட்டைப் பகுதியில் இரு தரப்புக்கும் இடையில் கடும் மோதல்கள் தொடர்வாகத் தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் அறிவித்துள்ளது. (எ-5)

## நாடாளு...

மேற்கொள்ளப்படுவதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது. எனினும் அது தொடர்பில் இன்றைய தினமே முடிபு எடுக்கப்படவுள்ளது. (சு)

## ஜீ.எஸ்.பி...

கிடைக்கப் பெற்றால் மகிழ்ச்சி. அவ்வாறு கிடைக்கப் பெறாவிட்டால் மாற்று வழிகளில் பொருளாதாரத்தை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜீ.எஸ்.பி. சலுகைத் திட்டத்தின் மூலம் ஐரோப்பிய சந்தைக்கு மட்டுமே பொருள்களை ஏற்றுமதி செய்ய முடியும் எனவும் அதனை விட விரிவான சந்தை வாய்ப்புக்களை இலங்கை பெற்றுக் கொள்ளும் எனவும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (சு-3,5)


மாபெரும் தீபாவளி கொண்டாட்டத்தை முன்னிட்டு

உள்நாட்டு வெளிநாட்டுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

FedEx Express
(யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்)

வாடிக்கையாளரின் நலன்கருதி
லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா விதமும்.
கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
MMBL Money Master
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)



/lingwa:/-2008
Lingua-2008

The Linguistics and English Society, Cordially invites you to
'Lingua 2008'
- An Exhibition -
Date :- 21st, 22nd of October 2008
Time :- 9 a.m. to 3.30 p.m.
Venue :- New Arts Block (2nd Floor) University of Jaffna.
Department of Linguistics and English. University of Jaffna.
(C-1702)



எக்ஸ்போ எயார் நிறுவனத்திற்கு மனமார்ந்த நன்றிகள்

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் துடுப்பாட்ட சங்கத்தினூடாக வெஸ்லிக் கல்லூரி பழைய மாணவர்களும் Munchee Clucofit நிறுவனத்தின் அனுசரணையோடு வெஸ்லிக் கல்லூரியில் நடத்தப்பட்ட ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர் துடுப்பாட்டப் போட்டியில் எமது யாழ்.மாவட்ட அணி பங்குபற்றியது.

மேற்படி துடுப்பாட்ட போட்டியில் பத்துப் பேர் கொண்ட துடுப்பாட்ட அணி கொழும்பு செல்வதற்கு EXPO AIR நிறுவனத்தினர் இலவசமாகப் பிரயாண ஒழுங்குகளைச் செய்து தந்தனர். இவ் அளப்பரிய உதவியை எமது மாணவர்களுக்குச் செய்து தந்து முழுச் செலவையும் பொறுப்பேற்ற EXPO AIR நிறுவனத்திற்கு யாழ்.மாவட்ட துடுப்பாட்ட அணி சார்பாகவும் யாழ்.மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் சார்பாகவும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்.மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம்
(C-1701)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.